பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 06 வெள்ளிக்கிழமை 22.07.2022 கதிர் 259

### இது ரகசியம் அல்ல!

தமிழ்க் கூட்டமைப்பின் முக்கிய எம்.பி. ஒருவரிடம் நேற்று ஒரு கேள்வி கேட்டேன். ”கடந்த செவ்வாய் மாலை உங்கள் கூட்டத்தில் டலஸை ஆதரிக்கும் முடிவை எடுத்தீர்களே. அது வெறு மனே வெற்றி – தோல்வியைப் பார்க்காமல் கொள்கை ரீதியாக ☞2

# ரணிலைப் பொறுத்துப் பார்ப்போம்!



## இப்படிச் சம்பந்தன் தெரிவிப்பு

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளைக் கொஞ்சம் பொறுத்துப் பார்த்து அதன் அடிப்படையில் முடிவுகளை எடுத்து எங்களால் இயன்றதைச் செய்வோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பதவியேற்றுள்ளார். தன்னுடன் இணைந்து செயற்படத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவர் பகிரங்கமாக அழைப்பு விடுதுள்ளார்.

இது தொடர்பில் எமது செய்தியாளரிடம் நேற்றிரவு சம்பந்தன் கருத்துரைக்கும்போதே ☞2

# தமிழரசின் தீர்மானம் பொறுப்பற்ற போக்கு

## கண்டிக்கின்றார் அக்கட்சியின் தலைவர் மாவை



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூலை 22

எழுபது ஆண்டு கால அனுபவத்தை கொண்டு இருக்கின்ற ஒரு கட்சியாக நாம் (தமிழரசுக் கட்சி) இருக்கும் போது, கட்சியின் பெயரில் எடுக்கப்பட்ட தந்திரோபாயமற்ற – பொறுப்பற்ற – தன்னிச்சையான – செயற்பாடுகள் விபரீதத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கவலை வெளியிட்டார். ☞4

## நீர்கொழும்பில் 33 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு கடல்வழியாக வெளியேற முயன்ற 33 பேர் நேற்று நீர்கொழும்பு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை நாளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கோட்டாவை விரட்டியடித்துவிட்டு ரணிலை ஜனாதிபதியாக்கிய போராட்டக்காரர்கள்!

### சீறிப் பாய்கின்றார் டலஸின் சகாவான விமல்



போராட்டக்காரர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்துவிட்டு தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததே இறுதியாகச் செய்த வேலை.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற ☞2

## வல்வை நகரசபை தலைவர் ராஜினாமா



வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர்பதவியிலிருந்து செல்வேந்திரா ராஜினாமாச் ☞4

## அலரிமாளிகை முன்னிருந்த ‘நோ டீல் கம’ வாபஸாகிறது



அலரிமாளிகைக்கு முன்னாள் அமைக்கப்பட்டிருந்த ‘நே டீல் கம’வை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்கு அங்குள்ள ஆர்பாட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர்எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தற்காலிக அமைச்சரவை இன்று பதவியேற்கின்றது

### புதிய பிரதமராகின்றார் தினேஷ் குணவர்தன



புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணத்தில் உள்ள தேசிய அரசுக்கான இணக்கப் பேச்சுகள் சில நாள்கள் பிடிக்கும் என்பதால் மொட்டுக் கட்சிக் கூட்டில் உள்ள தரப்பினர் மட்டும் அடங்கிய புதிய தற்காலிக அமைச்சரவை இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவியேற்கவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் ☞2

## 17 கோடி ரூபா பெறுமதி கஞ்சா புதனிரவு டிங்கியுடன் சிக்கியது!

### காரைநகர் கடற்கரைப் பகுதியில்



யாழ்ப்பாணம் – காரைநகர் கடற்கரைப் பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது சுமார் 575 கிலோ 600 கிராம் கேரள கஞ்சாவை ஏற்றிச் சென்ற ☞2

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு

புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் ☞2

## இந்தியாவில் பழங்குடி இனப் பெண் ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றி

### 25இல் அரியணை ஏறுகின்றார் திரௌபதி முர்மு



இந்தியாவின் 15ஆவது புதிய ஜனாதிபதியாக திரௌபதி முர்மு தெரிவாகியுள்ளார்.

மூன்று சுற்று வாக்கு எண்ணிக்கைக்குப் ☞4

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கப்பட்ட முடிவா? அல்லது டலஸுக்கு வெற்றி நிச்சயம் என்ற உறுதிப்பாட்டோடு எடுக்கப்பட்ட தீர்மானமா?" – எனக் கேட்டேன்.

"டலஸை ஆதரிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றவர்கள், டலஸின் வெற்றி நிச்சயம் என்ற உறுதியில்தான் அந்த முடிவை வற்புறுத்தினார்கள். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் முடிவு தலைகீழாகிவிட்டது. டலஸ் ஐம்பதுக்கு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப் போனார்" – என்றார் அந்த எம்.பி.

இதைக் கேட்ட போது எனக்கு பழைய சம்பவம் ஒன்று – 2005இல் – 17 ஆண்டுகளுக்கு முன்னர் – நடந்தது நினைவுக்கு வந்தது. அதை இரைமீட்டுக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னரும் இப்பந்தியில் இதனை சுட்டிக்காட்டினேனோ நினைவில்லை.

2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தல். ஒரு புறம் ரணில். மறுபுறம் மஹிந்தர். அவருக்கு இது முதல் ஜனாதிபதித் தேர்தல்.

அந்தச் சமயத்தில் வடக்குக் கிழக்கில் – தமிழர் தாயகத்தில் – மக்களைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரினர் விடுதலைப் புலிகள். தமிழ் வாக்குகளை நம்பி இருந்த ரணில் அதிர்ந்து போனார். இத்தகைய முடிவை புலிகள் ஏன் எடுத்தார்கள் என்பதை நான் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதுவேன். அந்த உண்மை விடயத்துக்கு எஞ்சி இருக்கும் சாட்சியாளர்கள் சிலரே. ரணில், அவரது ஊடகச் செயலாளர் அத்தாவுடஹெட்டி, உதவியாளர் இக்பால்... அப்படி சிலருக்கு மட்டும் தான் தெரிந்த உண்மை. அவற்றை நான் பின்னர் விரிவாகத் தருவேன். அதுவல்ல இப்போதைய விடயம்.

அந்த சமயத்தில் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்த எனக்கும் புலிகளின் தலைவர்களுக்கும் இடையிலான நட்புறவை நன்கு அறிந்திருந்த ரணில் விக்கிரமசிங்க தம் சார்பில் புலிகளிடம் தூது சென்று, மக்களை வாக்களிக்க அனுமதிக்குமாறு கோரும்படி வேண்டினார். கொழும்பு கொள்ளுப்பிட்டியில், ஐந்தாம் ஒழுங்கையில் உள்ள ரணிலின் வீட்டில் அதிகாலை ஒரு மணி வரை அவருடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, ரணில் தெரிவித்த விடயங்களுடன் கொழும்பிலிருந்து புறப்பட்டேன். நானே காரைச் செலுத்தினேன். காலை 6 மணிக்கு தாண்டிக்குளம் தாண்டினேன்.

காலை 10 மணி முதல் கடும் நித்திரைத் தூக்கக் கலக்கத்துடன் சுமார் 2 மணி 30 நிமிட நேரம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறை செயலகத்தில் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் விவாதம். அதை ஒட்டிக் கட்டவிழ்ந்த விடயங்கள், விவரங்கள் ஒரு நாவல் போல சுவாரசியமாக விரிவாக எழுதத் தக்கவை. நிச்சயம் பின்னர் எழுத்தில் அவை வரும் – என்ன நடந்தது, என்ன விவாதித்தோம் என்பவற்றை.

அன்று முதல் சுற்றுப் பேச்சுப் பிழைத்தது. சரி வரவில்லை. ஆனால் சில தினங்கள் கழித்து புலிகள் வழிக்கு வந்தார்கள். எனினும் தமது வெற்றியில் ரணிலுக்கு அதீத நம்பிக்கை பிறக்க, அவர் வழிக்கு வராமல் பிகு பண்ணி, வாய்ப்பைக் கோட்டை விட்டு, தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக்கொண்டார். அந்த விவரங்களைப் பின்னர் பார்ப்போம். இன்றைய விடயத்திற்கு வருவோம். அன்று, என்னுடைய நீண்ட நியாயப்படுத்தல்களின் பின்னரும் மக்களை வாக்களிக்க அனுமதிப்பது இல்லை என்ற முடிவை மாற்றுவதற்கு மறுத்த தமிழ்ச்செல்வனிடம் விசனத்துடன் ஒரு கேள்வியை முன் வைத்தேன்.

"தம்பி நீங்கள் எங்கள் மக்களை வாக்களிக்க விடாமல் மறுத்த பின்னரும், ரணில் வென்று ஜனாதிபதியானால் என்ன செய்வீர்கள்? அதை எப்படி முகம் கொள்வீர்கள்?" – என்று கேட்டேன். தமக்கே உரிய புன்சிரிப்புடன் என்னை ஒரு நக்கல் பார்வை பார்த்தார் தமிழ்ச்செல்வன். அடுத்து அவரது வார்த்தைகள் கணீரென வெளிவந்தன. எனது காதுகளில் அது இன்னும் எதிரொலிக்கின்றது. "அண்ணே! நாங்கள் எங்கள் மக்களை வாக்களிக்க அனுமதித்தால் ரணில் மூன்று லட்சம் அதிகப்படியான வாக்குகளினால் வெல்லுவார், நாங்கள் எங்கள் மக்களை வாக்களிக்க விடாது மறித்தால் அவர் 2 லட்சம் வாக்குகளினால் தோற்பார்" – என்று வலு தெளிவாகவும், உறுதியாகவும் கூறினார்.

அந்தச் சுற்றுப் பேச்சு தோல்வியுடன் திரும்பினேன். வவுனியாவிலிருந்து ரணிலுக்கு தொலைபேசி மூலம் தகவல் தந்து விட்டு, வவுனியாவில் காருக்குள்ளேயே ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டு கொழும்பு திரும்பினேன். எனினும் எனது முயற்சியை நான் கைவிடவில்லை. அது ரணிலுக்கும் நன்கு தெரியும். எனது 'அலுப்பு' தாங்க முடியாமல் தேர்தலுக்கு நான்கு, ஐந்து நாள்களுக்கு முன்னர் மக்களை வாக்களிப்பதற்கு அனுமதிக்கும் ஒரு திட்ட யோசனைக்குப் புலிகள் இணங்கினர். என் மூலம் ரணிலுக்கு அது தெரியப்படுத்தப்பட்டது. உதயன் நிர்வாக இயக்குநரும், பின்னாளில் நாடாளுமன்ற உறுப்பினருமான சரவணபவன் சகிதம் தேர்தலுக்கு நான்கு நாள்கள் இருக்கையில் ரணிலின் வீட்டில் நள்ளிரவு வேளை அவரைச் சந்தித்தோம். புலிகளின் குறைந்த பட்ச எதிர்பார்ப்பை விவரித்தேன். அது ஒரு சின்ன விடயம். அதைச் செய்வதற்கு ரணில் முன் வரவில்லை. தனது வெற்றி மீது இருந்த அதிக நம்பிக்கையால் அந்த அற்ப விடயத்திற்கு இணக்கம் காணாமல் நிராகரித்தார் ரணில். கடைசியில் ஒரு லட்சத்து 81ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப் போனார் அவர். ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ ஓரிரு நாள்களிலேயே என்னை அழைத்து, பாலசிங்கத்திடமும் தமிழ்செல்வனிடமும், பின்னர் தலைவர் பிரபாகரனிடமும் தமது தூதுவராக அனுப்பினார்.

அதனை ஒட்டி அவரது அலரிமாளிகையில் பல தடவைகள் அடுத்தடுத்து அவரைச் சந்திக்க வேண்டி இருந்தது. பரஸ்பர நட்புறவு, நல்லுறவு அதனால் ஏற்பட்டது.

அச்சமயத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்ச்செல்வனின் தேர்தலுக்கு முந்திய உத்தேச மதிப்பீட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விவரித்தேன். திறந்த வாய் மூடாத குறையாக கேட்டுக் கொண்டிருந்த அவர், இன்னும் ஒரு விடயத்தைச் சொன்னார்.

"இரண்டு லட்சம் வாக்குகள் வித்தியாசம் என்று அவர்களின் கணக்கீடு துல்லியமானது. அப்படி அவர்கள் மதிப்பிட்டு இருந்தனர் என்பதை நாங்களும் அறிந்திருந்தோம். வடக்கு, கிழக்கில் தமிழ் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் மறித்த புலிகளினால் மட்டக்களப்பில் கருணாவின் பிரதேசத்தில் சில இடங்களில் தமிழ் வாக்காளர்களை மறிக்க முடியாமல் போயிற்று. அதனால் அப்பகுதிகளில் ரணிலுக்கு 20 ஆயிரம் வாக்குகள் வரை விழுந்தன. அதனால்தான் எனக்கு கிடைத்த மேலதிகம் ஒரு லட்சத்து 81ஆயிரம் ஆகிவிட்டது. இல்லையேல் அது அவர்களின் மதிப்புத்தின்படி 2 லட்சம் தான்" என்றார் மஹிந்தர்.

இலங்கை முழுவதிலும் உள்ள தேர்தலின் முடிவு எப்படி இருக்கும் என்பதைத் துல்லியமாக தமிழ்ச்செல்வனால் கூற முடிந்தது எங்ஙனம் என்பதை என்னால் இன்னும் கூட ஊகிக்கவோ நம்பவோ முடியவில்லை. நம்பவும் ஆச்சரியமாக இருந்தது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் கொண்ட நாடாளுமன்றத்தில் அவர்களுடன் நாளும் பொழுதும் விடாது நெருங்கிப் பழகும் தமிழர் தலைவர்களினால் அவர்களிடமிருந்து வரக்கூடிய முடிவை சற்றேனும் ஊர்ஜிதப்படுத்த முடியாமல் போனமை அவர்களின் ஊகிக்கும் அறிவுக்கு இழுக்குதான்.

ரணில் விக்கிரமசிங்க 120க்கும் குறையாத வாக்குகளைப் பெறுவார் என்று உறுதியான தகவல்கள் எங்கள் தலைவர்கள் சிலரின் வீம்புத்தனத்தினால், பிடிவாதத்தினால், அழிச்சாட்டியத்தினால், அவர்களின் கண்களுக்குத் தெரியாமல் மறைத்து விட்டது. அவ்வளவுதான்.

இன்று நான் விவரித்த சம்பவங்களில் 'இடையில் சில பக்கங்கள் மிஸ்ஸிங்' மாதிரி சுவாரஸ்யமான பல தகவல்கள் இல்லை என்பது வாசகர்களுக்கு எரிச்சலைத் தந்திருக்கும். விரைவில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவற்றை விவரிப்பேன்.

ரணில் என்ற மனிதரைத் தமிழர்கள் எடை போட அந்த விவரங்கள் உதவும் என்று நம்புகிறேன்.

– மின்னல் –

## தற்காலிக அமைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பதவியேற்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 முதல் 25 இற்குள் மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் இளம் எம்.பிக்கள் சிலருக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, எதிர்க்கட்சி பக்கத்தில் உள்ள எம்.பிக்கள் சிலரும் இதன்போது அமைச்சர்களாகப் பதவியேற்க வாய்ப்புள்ளது என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

## கோட்டாவை விரட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தின் பலனாக ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். அதனைத் தொடர்ந்து அவர் ஜூன் 9ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தால் பதில் ஜனாதிபதியாகவும், தற்போது ஜனாதிபதியாகவும் ஆகியுள்ளார்.

"இதுதான் இப்போது போராட்டக்காரர்கள் சாதித்துள்ள நிலைமையாகும். அதனால்தான் கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற கோஷத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. இதுபோன்ற நடவடிக்கை அவரை விட மோசமான ஒருவரை ஜனாதிபதி அலுவலகத்துக்கு வர மட்டுமே அனுமதிக்கும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்தினேன். இந்த இளைஞர் போராட்டக்காரர்கள் அதை உணரும் அளவுக்கு புத்திசாலித்தனமாக இல்லை.

"போராட்டத்தின் விளைவாக உருவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பின்மை காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் 134 வாக்குகளைப் பெற முடிந்தது.

"ஜனநாயக ரீதியில் செயற்படும் டலஸ் அழகப்பெருமவை விட ரணில் விக்கிரமசிங்கவால் போராட்டத்தை அடக்கி தமது உயிரைப் பாதுகாக்க முடியும். அதனால்தான் 134 எம்.பி.க்கள் அவருக்கு வாக்களித்தனர்.

"கொள்கையோ, உத்தியோ, நோக்கமோ இல்லாத போராட்டத்தின் விளைவாக, ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தாத ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு போராட்டக்காரர்களை அடக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

"தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவால் முடியும் என நாங்கள் ஒருபோதும் நம்பமாட்டோம்" – என்றார்.

## புதிய அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பதவியேற்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 முதல் 25 இற்குள் மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் இளம் எம்.பிக்கள் சிலருக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, எதிர்க்கட்சி பக்கத்தில் உள்ள எம்.பிக்கள் சிலரும் இதன்போது அமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ரணிலைப் பொறுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். அவர் பதவியேற்பதற்கு முன்பதாகப் பல விடயங்கள் பற்றிப் பேசியுள்ளார்.

நாட்டின் பல தேசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி இடைக்கால அரசை நிறுவவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டினுடைய பொருளாதார நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நாடு செயற்பட முடியாத நிலைமை ஏற்படுவதற்கு முன்பதாக சாதகமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அவற்றைப் புதிய ஜனாதிபதி செய்வார் என்று நான் நம்புகின்றேன்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. புதிய ஜனாதிபதி இதற்கு முன்பதாக முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

தற்போது அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவருடன் இருப்பவர்கள் அரசியல் தீர்வு விடயம் குறித்து கரிசனை செலுத்துவார்களா என்பதை நாங்கள் கொஞ்சம் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

எனவே, நாங்கள் பொறுத்துப் பார்த்து அவர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுத்து எங்களால் இயன்றதைச் செய்வோம் – என்றார்.

## 17 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டிங்கி படகு ஒன்றைக் கைப்பற்றியதுடன் 02 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கடலில் சந்தேகத்திற்கிடமான படகில் இருந்து 17 பொதிகளில் இதே கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மேலும், இந்த சட்டவிரோத செயலுக்கு பயன்படுத்தப்பட்ட டிங்கி படகுடன் கேரள கஞ்சா கடத்தலில் தொடர்புடைய 02 சந்தேக நபர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இந்த நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 17 கோடி இருபது லட்சம் ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் மாதகல் பகுதியைச் சேர்ந்த 42 மற்றும் 51 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மாவையின் சின்னத்தனம்

**'விழுந்த பக்கம் குறி சுடுதல்' என்று சொல்லுவார்கள். அப்படி ஒரு வேலையைத்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா செய்திருக்கின்றார். முழுதும் சின்னத் தனமான வேலை.**

**எழுபது ஆண்டு கால அனுபவம் கொண்ட கட்சியின் முப்பத்தைந்து வருட செயலாளர், கட்சியின் கடந்த எட்டு ஆண்டு காலத் தலைவர், இப்போது கட்சிக்கு வெளியே இருப்பவர் போல இருந்து கொண்டு விமர்சனம் செய்கின்றார்.**

**இலங்கைத் தமிழரசுக் கட்சி, மேற்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளி. நாடாளுமன்றப் பதிவுகள் எல்லாம் தமிழரசின் பெயரில்தான் உள்ளன.**

**கடந்த 19ஆம் திகதி இரவு அக்கட்சி கூடி ஒரு முக்கிய முடிவு எடுக்கப்போகின்றது என்பது எல்லோருக்கும் தெரியும். சுமந்திரன் போன்றோர் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். குறைந்த பட்சம் 'காலைக்கதிர்' வாசித்திருந்தால் கூட நிலைமை புரிந்திருக்கும்.**

**அப்படி ஒரு கூட்டம் நடைபெறுகையில் தமிழரசுக் கட்சித் தலைவர் என்ன சந்திர மண்டலத்திலா இருந்தார்? இப்போது உலகமே பூகோளக் கிராமமாகி விட்டது. லண்டனில் இருந்திருந்தால் கூட கொழும்பில் சம்பந்தன் வீட்டில் நடந்த கலந்துரையாடலில் தமிழரசுத் தலைவர் என்ற முறையில் அவர் காத்திரமாகப் பங்களித்திருக்க முடியும்.**

**விடயம் என்னவோ தமிழரசுக் கட்சியின் பெயரில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றக் குழுவின் முடிவு என்றாலும், கட்சித் தலைவர் என்ற முறையில் அதில் தலையிட்டு இந்த முக்கியமான தீர்மானத்தில் காத்திரமான பங்கை மாவை சேனாதிராசா ஆற்றியிருக்க வேண்டும். அதைச் செய்ய முடியாவிட்டால் அவர் இரண்டு வேலை செய்திருக்க வேண்டும்.**

**ஒன்றில் – தமது இயலாமை கருதி வேறு வழியின்றி பம்மிக் கொண்டிருக்க வேண்டும்.**

**இல்லையேல் – முக்கிய தீர்மானத்தில் காத்திரமாகப் பங்களித்து வழிநடத்த முடியாத தமது இயலாமைக்கு – தவறுக்கு – பொறுப்பேற்று, தமது தலைவர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு வெளியே வந்து இந்த வியாக்கியானங்கள், விளக்கங்களை முன்வைத்திருக்கலாம்.**

**அதை விடுத்து, கட்சிக்குள் தான் கோட்டை விட்டு விட்ட தகைமையைத் தேடிப் பிடித்துத் தக்க வைக்கவும் –**

**உள்கட்சி அரசியலில் தனது கட்சி எதிரிகளை அரசியல் ரீதியாகப் பந்தாடவும் –**

**இப்படிக் கட்சி விடயத்தை – கட்சியின் ஊத்தையை – பொது வெளியில் கழுவுவதற்கு அவர் நடவடிக்கை எடுத்தமை அவரின் அரசியல் சின்னத்தனமின்றி வேறில்லை.**

**அடங்கிப் போன – போகவேண்டிய – இந்திய விவகாரத்தை தமது அரசியல் சுயநலனுக்காக – தன்னைக் காபந்து பண்ணி, உள்கட்சி அரசியலில் இன்னும் சில வருடங்கள் தலைமைப் பதவியை விடாமல் பிடித்திருக்கும் பதவி ஆசையை நிறைவு செய்வதற்கான வாய்ப்பாக – மீண்டும் ஊடக மேடையில் கிளறி விட்டு, அரசியல் குசும்புத்தனம் பண்ணியிருக்கின்றார் மாவை.**

**கூட்டமைப்பு எடுத்த முடிவு தவறு என்றால், அதில் தனக்குத் தொடர்பில்லை என்று காட்டுவதற்கு மூத்த அரசியல் தலைவர் மாவை சேனாதிராசா எடுத்த முயற்சி – தலைமைப் பொறுப்புக்கு – கூட்டுப் பொறுப்புக்கு – முற்றிலும் மாறான அரசியல் சின்னத்தனமின்றி வேறில்லை. இவருக்கு ஏன் தலைமைப் பதவி?**

## மக்கள் போராட்டத்தை அடக்க முடியுமானவரையே நாடாளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவுசெய்துள்ளது!

### விமல் வீரவன்ஸ சீற்றம்

மக்கள் போராட்டங்களை 88, 89 காலப் பகுதியில் அடக்கியது போன்று தற்போது ஏற்பட்டுள்ள மக்கள் போராட்டத்தை அடக்க முடியுமான ஒருவரையே ஜனாதிபதியாக நாடாளுமன்றம் தெரிவுசெய்துள்ளது.

ஆனால் அப்போது சமூக வலைத்தளங்கள் இருந்திருக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும் என சுயாதீன கட்சிகளின் கூட்டணி எம்.பியான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் மொட்டுக் கட்சியை சேர்ந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர்.

அவர் தேசியப் பட்டியலில் ஒன்றரை வருடத்தின் பின்னர் வந்தவர். இறுதியில் அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் போராட்டங்களை 88, 89 காலப்பகுதியில் ஒடுக்கியதை போன்று இப்போதும் செய்யலாம் என்று நினைக்கின்றனர்.

ஆனால் அப்போது சமூக வலைத்தளங்கள் இருக்கவில்லை. இதனால் இப்போது ஏற்பட்டுள்ள புதிய நிலைமைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த நேரத்தில் ஒடுக்குமுறைகளுக்கு செல்லக்கூடிய ஒருவரையே ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளனர். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை எதிர்வரும் காலங்கள் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் காலம் என்பதுடன் ஜனநாயக ரீதியிலான உரிமைகளை ஒடுக்கும் காலமாகவும் அமையும் அதற்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது – என்றார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்ருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன ? என கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில், ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து கற்றுக்கொள்ளும் பாடம் என்னவென்றால் எம்.பிக்கள் அச்சத்திற்கு உள்ளாகினால் எதனையும் செய்ய முடியும் என்பதேயாகும். எம்.பிக்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்புக்கு முதலிடம் என்றால் அதனை முன்னுக்கு வைத்து எதனையும் செய்ய முடியும்.

எனவே நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எங்களின் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். குறிப்பாக ரஷ்யாவில் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். இன்னும் ஓர் இரண்டு வாரங்களில் அதனை நாட்டுக்கு கொண்டுவர முடியுமாகும். – என்றார்.

---

## தமிழரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது அங்கு சென்ற டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் எழுத்து மூலம் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. நான் அந்த நிகழ்வுக்கு போக முடியவில்லை. இந்த விடயம் இரவோடு இரவாக ஊடகங்களுக்குச் செய்திகளாகச் சென்றிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் நடக்கின்ற நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாகப் பிளவுபட்டு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாட்டைஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று செய்தியை இரவில் தெரியப்படுத்தும் நிலை உருவானது. இது பாரதூரமான நிலைமை. அவ்வாறு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் அதனை வெற்றி பெற்றதற்கு பின்னர் வெளியிட்டிருக்க முடியும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அது தெரிந்தால் போதுமானது. அதற்கிடையில் அதனை வெளியே கூறியதை ஏற்க முடியாது. இதன் காரணத்தினாலும் எதிர்பாராத தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தியா நிர்பந்தித்துதான் ரணிலுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்ற கருத்து அங்கு பேசப்பட்டு இருக்கின்றதென தகவல் வெளியாகியுள்ளது. அதனுடைய உண்மை எனக்கு தெரியாது. எதுவாக இருந்தாலும் அவ்வாறு இந்தியாவினுடைய பெயரை உச்சரித்து அந்த தீர்மானத்தை எடுத்தமையை நான் மிகவும் வன்மையாகக் கண் டிக்கின்றேன். இது ராஜதந்திரமற்ற – மூலோபாயமற்ற – விடயம் என்பதுடன் ஒரு பிரச்சினையையும் உருவாக்கி இருக்கின்றது. இவ்வாறான செய்திகள் காரணமாக பலர் என்னுடன் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு செய்தி வெளியான நிலையில் மறுநாள் காலையில் அவ்வாறான எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை, ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சுமந்திரனுடைய பெயரில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இவை எல்லாம் தந்திரோபாயமற்ற, பொறுப்பற்ற செயல்களாகும். இதன் காரணமாக டலஸ் அழகப்பெரும எதிர்பார்த்த வாக்குகளை பெற முடியாமல் ரணில் எதிர்பார்த்த அளவுக்கு 134 வாக்குகள் பெறுகின்ற நிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

எழுபது ஆண்டு கால அனுபவத்தை கொண்டு இருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஒரு கட்சியாக இருக்கும் போது இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடுகள் எவ்வளவு விபரீதத்தை ஏற்படுத்தி இருக்கின்றது? எமது கருத்தில் நம்பிக்கையில்லை என்று இந்தியாவை இழுத்துப் பேச வேண்டிய சந்தர்ப்பத்தை நினைத்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

அவ்வாறு பாவித்துதான் டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்திருந்தால் அது பாரதூரமானது. இந்தக் கருத்து மிகவும் பாதகமானது. முழுமையான எங்களுக்குப் பலமாக இருக்கின்ற இந்தியாவினுடைய பெயரைக் கூறுவது மிகவும் தவறான செய்தியாகும். இதனால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும். – என்றார்.

---

## இந்தியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிறகு மொத்த வாக்கு மதிப்பில் 50 சதவீதத்துக்கு மேல் அவர் பெற்றுள்ளார்.

இந்தநிலையில் இந்தியா தனது இரண்டாவது பெண் மற்றும் முதல் பழங்குடி இனப் பெண் ஜனாதிபதியை தெரிவுசெய்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹா தோல்வியை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் எதிர்வரும் 24ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இந்தநிலையில் மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக ஒடிசாவைச் சேர்ந்த பிரபல பழங்குடியின தலைவரும் ஜார்கண்ட் மாநில முன்னாள் ஆளுநருமான திரௌபதி முர்மு போட்டியிட்டார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய அமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸைச் சேர்ந்தவருமான யஷ்வந்த் சின்கா போட்டியிட்டார்.

வெற்றி பெற்ற திரௌபதி முர்முவுக்குப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்தியுள்ளார்.

---

## வல்வை நகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி, தமிழ் தேசிய கூட்டமைப்பு வல்வை நகரசபை உறுப்பினர்களுடன் செய்து கொண்ட நல்லெண்ண புரிந்துணர்வு அடிப்படையில், சேவைக் காலம் முடிவடைந்த நிலையிலேயே இந்த ராஜினாமா இடம்பெற்றுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களை பிரதிநிதிப்படுத்தும் நகரசபைத் தலைவருக்கான வாக்கெடுப்பு விரைவில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்தியாவையும் தொற்றிக் கொள்ளுமா?

## அந்த நாட்டின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

இலங்கைக்கு 3.8 பில்லியன் டொலர்களை 'மனிதாபிமான' உதவியாக இந்தியா வழங்கியுள்ளமை மூலம் அந்நாட்டிற்கான மிகப் பெரும் உதவும் நாடாக இந்தியா மாறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற கடன் வழங்குநர்கள் உட்பட பலதரப்பு நிதி அமைப்புகள் ஊடாக 'உதவி மற்றும் வசதி' பெறும் இலங்கையின் ஈடுபாட்டிற்கு இந்தியா உதவும் என்று வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் இலங்கை தொடர்பாக செவ்வாயன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பிறகு தெரிவித்தார்.

ஜெய்சங்கர் கூறுகையில், 'இலங்கையில் மிகக் கடுமையான நெருக்கடி நிலவுகிறது' என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு இந்த முயற்சி (அனைத்து கட்சி கூட்டம்) அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது என்றார். நாம் என்ன பார்க்கிறோம் என்றால் – அதன் நிதி, சமூக மற்றும் அரசியல் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அங்குள்ள நிலைமை முன்.பின் இடம்பெறாதது. இது எங்களின் மிக நெருங்கிய அண்டை நாடு. எனவே, இயற்கையாகவே இதனால் நெருக்கடி இந்தியாவுக்குக் கசிந்து. விடுமோ என்ற கவலையும், கவனமும் நமக்கு உள்ளது. அண்டை நாட்டில் ஸ்திரமின்மை அல்லது வன்முறை ஏற்பட்டால், அது எங்களுக்கு ஆழ்ந்த கவலையளிக்கும் விடயம் என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், இரண்டு பிரச்சினைகள் கொடியிடப்பட்டன.

முதலலாவது – இந்திய மீனவர்கள் மற்றும் இலங்கையில் இருந்து 12 கிலோ மீட்டர் அகல தண்ணீர் பட்டியால் பிரிக்கப்பட்ட தமிழகத்தில் தொடர்ந்து பரவி வரும் பிரச்சினைகளின் அனைத்து அம்சங்களும். இது தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நீண்டகால பிரச்சினைகள் இருப்பதாக ஜெய்சங்கர் ஒப்புக் கொண்டார்.

அடுத்தது,இலங்கையின் பொருளாதார நெருக்கடி. பொருளாதார நெருக்கடி மற்றும் பிற நாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டிய பணமும் உடனடிச் சிக்கல்களாகும் என்றார் ஜெய்சங்கர்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பீடுகள் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை உட்பட அனைத்துஅம்சங்களிலும்பொருத்தமற்றவை மற்றும் தவறானவை என்றும் அவர் கூறினார்.

இந்தியாவை இலங்கையுடன் ஒப்பிட்டு, அங்குள்ள மக்கள் எழுச்சியைக் குறிப்பிட்டு இரண்டு நாள்களாக ராகுல் காந்தி ட்வீட் செய்திருந்தார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பாக, அண்டை நாட்டில் நிலவும் நெருக்கடியில் இந்தியா தலையிட வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க. போன்ற அரசியல் கட்சிகள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தன.



ஆனால், ஜெய்சங்கர் எந்த விதமான தீவிரமான தலையீட்டையும் குறிப்பிடவில்லை.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகம், இந்தியா இராணுவ ரீதியாக தலையிடும், அல்லது மதிப்பிழந்த ராஜபக்ஷ ஆட்சியைப் பாதுகாக்க எந்த வகையிலும் செயல்படும் என்ற ஊகங்களைப் பல முறை மறுத்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் முன்னிலையில் இருந்தனர். அவர்கள் இந்தியா இலங்கை வழியில் செல்லலாம் என்ற கருத்தை எதிர்த்து விரிவான விளக்கங்களை அளித்தனர்.

"பல உறுப்பினர்கள் இலங்கையின் படிப்பினைகள் குறித்து அக்கறை கொண்டிருந்தனர், நாங்கள் அந்தக் கேள்வியை எதிர்பார்த்தோம். இலங்கையில் ஏதோ நடந்துள்ளது என்று சில தவறான ஊகங்களை பத்திரிகைகளில் பார்த்தோம், எனவே இந்தியாவின் சில பகுதிகளின் நிலைமைகள் குறித்து நாங்கள் கவலைப்பட வேண்டும். எனவே, நாங்கள் செய்தோம். மாநில வாரியாக, வருவாய் ஒப்பீடு, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பொறுப்புகள், வளர்ச்சி விகிதம் அல்லது பல்வேறு இந்திய மாநிலங்களின் கடன்கள், அவர்கள் செய்த பட்ஜெட் கடன்கள், சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவற்றை மாநில வாரியாக ஒரு விளக்கக்காட்சியை வெளியிடுமாறு நிதி அமைச்சகம் கேட்டுக் கொண்டது. டிஸ்காம்கள் மற்றும் மாநிலங்களுக்கு நிலுவையில் உள்ள உத்தரவாதங்கள் பற்றிப் பார்த்தோம். எனவே நாங்கள் ஒரு நல்ல விவாதத்தை நடத்தினோம். நாங்கள் எவ்வளவு செய்தோம் என்பதை அறிய உறுப்பினர்கள் மிகவும் ஆர்வமாக இருந்தனர் என்று ஜெய்சங்கர் கூறினார்.

பெரும் நிதிப் பற்றாக்குறை உள்ள மாநிலத்தை நடத்தும் தெலுங்கானா ராஷ்டிர சமிதி போன்ற கட்சிகளால் இது உடனடியாக விமர்சிக்கப்பட்டது.

மாநிலக் கடன்களைக் குறிப்பிடுவதை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். மத்திய அரசு ஏன் கடன் வாங்கவில்லை? இதில் ஏன் அரசியலைக் கொண்டுவர வேண்டும்? பா.ஜ.க. அலுவலகம், அதன் அரசியல் நோக்கத்தின் மூலம், தெலுங்கானா நிதிப் பிரச்சினையை முன்னிலைப் படுத்தியுள்ளது, என்று தெலுங்கானா ராஷ்டிர சமிதி வட்டாரங்கள் ஏஜென்சிகளிடம் தெரிவித்தன.

கூட்டத்திற்குப் பிறகு, தேசிய மாநாட்டுக் தலைவர் ஃபரூக் அப்துல்லா கூறியவை வருமாறு:–

"அந்த நாடு (இலங்கை) இறந்து கொண்டிருக்கிறது. அந்த நாட்டை காப்பாற்ற வேண்டும். நமது (இந்தியாவின்) நிலை மோசமாக இல்லை, நமது கையிருப்பு சிறப்பாக உள்ளது என்று நிதித் துறை செயலாளர் கூறினார். சீனாவின் கடன் பொறி (இலங்கைக்கு) மட்டும் கவலையில்லை. பல இடங்களில் பணம் எடுத்துள்ளனர். சர்வதேச நாணய நிதியம் இல்லாமல் அவர்களுக்கு வேறு வழியில்லை. அதற்கு இந்தியா உதவும் என்று நம்புகிறேன் – என்றார்.

அரசாங்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராக நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, காங்கிரஸ் கட்சியின் ப சிதம்பரம், மாணிக்கம் தாகூர், தேசியவாத காங்கிரஸின் (என்.சி.பி.) சரத் பவார்,திராவிட முன்னேற்றக் கழகத்தின் டிஆர் பாலு எம்எம் அப்துல்லா எம்.தம்பிதுரை (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்), சவுகதா ரே (திரிணாமுல் காங்கிரஸ்), பரூக் அப்துல்லா (தேசிய மாநாடு), சஞ்சய் சிங் (ஆம் ஆத்மி), கேசவ ராவ் (தெலுங்கானா ராஷ்டிர சமிதி), ரித்தேஷ் பாண்டே (பகுஜன் சமாஜ் கட்சி), விஜயசாயி ரெட்டி (வை.எஸ்.ஆர். காங்கிரஸ்) மற்றும் வைகோ (மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்) ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



# முப்படையினர், பொலிஸாரின் சேவைகளுக்கு நன்றிகளைத் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில்!







ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க கடந்த சில நாள்களாக முப்படையினர் மற்றும் பொலிஸாரின் சேவைகளுக்காக தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தை விட்டு வெளியேறிய புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தனது வாகனத்தில் இருந்து இறங்கி நாடாளுமன்றத்துக்கு வெளியே கடமையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படை வீரர்களைச் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, கடந்த சில நாள்களாக நாடாளுமன்றத்தை பாதுகாத்த பாதுகாப்பு படை வீரர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

ஜனநாயகத்தை பாதுகாக்கவும், நிலைநாட்டவும் உழைத்த பாதுகாப்புப் படை வீரர்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெருந்தொகைப் பணத்துடன் வவுனியாவில் குடும்பஸ்தர் கைது!

வவுனியா, ஜுலை 22

வவுனியாவில் 4 லட்சம் ரூபா பணத்துடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, சிதம்பரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 4 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த் தகரால் சிதம்பரபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிரோசன் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் கமகே மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான பண்டார, மதன்ராஜ், ரவிகரன் உள்ளடங்கிய பொலிஸார் துரித நடவடிக் கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சிதம்பரபுரம் பகுதியில் வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 50 வயது நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து திருடப்பட்ட 4 லட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின் மேற்படி நபரை நீதிமன்றில முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மக்களின் கோரிக்கைகளை நசுக்காதீர்கள் புதிய ஜனாதிபதியிடம் ஹிருணிகா கோரிக்கை



புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி இந்த நாட்டு மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றினையிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

ரணில் ராஜபக்ஷ அவர்களே உங்களின் வெற்றி நாடாளுமன்ற யதார்த்தத்தின் விசித்திரமான பிரதிநிதித்துவம் மட்டுமே. எனவே மக்களுடன் நின்று ஜனநாயக கொள்கைகளைக் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தயவு செய்து, உரிமைக்காகப் போராடும் மக்களின் கோரிக்கைகளை நசுக்காதீர்கள். மக்களின் குரலுக்கு செவிசாய்த்து விரைவில் பொதுத் தேர்தலுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## கல்முனையில் அரசியல் தலையீட்டினால் சமையல் எரிவாயு வழங்கலில் முறைகேடு!

கல்முனை மாநகரில் சமையல் எரிவாயு விநியோகத்தில் அரசியல் தலையீடுகள் இருப்பதால் முறைகேடுகள் இடம்பெறுகின்றமையுடன் மக்கள் பிரதிநிதிகள் தலையிட்டு அவர்களின் ஆதரவாளர்களுக்கு மற்றும் குடும்பத்தினருக்கு வழங்கி வருகின்றனர்.

இதனால் தேவையுடைய மக்களாகிய எங்களுக்கு கிடைப்பதில் இடர்பாடுகள் இருக்கின்றன என பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கல்முனை மாநகர பிரதேசங்களில் பிரதேச செயலகத்தையும் தாண்டி கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் பலர் தலையிட்டு சமையல் எரிபொருளுக்கான டோக்கன்களை வழங்கி அவர்களுக்கு சமையல் எரிவாயுவை பெற்றுக்கொடுக்கின்றனர்.

இந்த வாய்ப்பு அவர்கள் கட்சி சார்ந்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. அதிலும் சிலர் தனது நெருங்கிய குடும்பத்தினர், தீவிர ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கி பங்கிடுவதால் பொதுமக்களுக்கு சமையல் எரிவாயு கிடைப்பதில் சிக்கல்கள் நிலவுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் கல்முனை பிரதேச செயலாளர் அரசியல்வாதிகளின் பின்னால் செல்லாமல் பொறுப்புவாய்ந்த அரச அதிகாரியாகச் செயற்பட்டு தேவையுடைய மக்களுக்கு கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோர்களை பயன்படுத்தி ஒழுங்கான முறையில் சகலருக்கும் கிடைக்கும் வண்ணம் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொடுக்க ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## மக்கள் கருத்திற்கும் வாக்கு வீதத்துக்கும் இடையே பாரிய இடைவெளி உள்ளது

### புபுது ஜயகொட தெரிவிப்பு



நாடாளுமன்றத்தில் வாக்கு சதவீதத்துக்கும் வெளியில் உள்ள மக்களின் கருத்துக்கும் இடையில் பல ஒளி வருட இடைவெளி இருப்பதாக சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மக்கள் சக்தி என்பது 69 லட்சம் வாக்குகளையும் மூன்றில் இரண்டு பெரும் பான்மை அதிகாரத்தையும் பெற்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய்யப் பயன்படுத்தப்பட்டது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பது ஜனாதிபதித் தேர்தலில் தெளிவாக நிரூபணமாகியுள்ளதாக புபுது ஜயகொட தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் கருத்து அரசியல் அபிலாஷைகளை சிறுமைப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்துக்கு வெளியே 200 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் கேள்விகள் மற்றும் குறைகள் இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நீண்ட காலமாக நாட்டு மக்களுக்கு நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை இல்லை எனவும், , பிரச்சினைகளைத் தீர்க்க போராட்டம் செய்ய வேண்டியுள்ளதாகவும், அதிகாரம் மக்கள் கையில் என்ற கோஷங்களை எழுப்பியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதித் தெரிவில் அவசரப்பட்ட சுமந்திரன்!

சுமந்திரன் அவசரப்பட்டு முதுகெலும்பு என்ற விடயங்களை பேசியிருப்பது ஒரு தவறான விடயமாகும் எனத் தான் கருதுகிறேன் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) சர்வதேச பொறுப்பாளரும், ஊடக பேச்சாளருமான குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய தொலைக்காட்சிக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்தவர்களை கைது செய்யுமாறு உத்தரவு!

தேசிய தொலைக்காட்சிக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போராட்டக்காரர்கள் இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு பொலிஸ் தலைமையகம் பணிப்புரை விடுத்துள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, தொலைக்காட்சி வளாகத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைய முயன்ற நபர்களை வீடியோ காட்சிகள் மூலம் அடையாளம் கண்டு கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நேரலை நிகழ்ச்சியில் இணைந்த இருவரில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்ட களத்திற்கு வந்த போது போராட்டம் இடம்பெறும் இடத்தில் இருந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்து விரட்டியடித்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

# கூட்டமைப்பின் கூத்து!



என்.சத்தியமூர்த்தி



## அக்கரை இக்கரை அலசல்

ஜனாதிபதி தேர்தலில், ரணில் விக்கிரமசிங்கவின் அமோக வெற்றியை தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்எதிர்காலமேகேள்விக்குறி ஆகியிருக்கிறதோ என்ற கேள்வி எழுகிறது. அதிலும் குறிப்பாக, கட்சியின் இளைய தலைமுறைத் தலைவர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரது திறமை மீது எப்போதும் இல்லாத சந்தேகம் தோன்றியுள்ளது.

இது போன்ற ஒரு எதிர்பார்த்திராத தேர்தலில், கட்சிகளின் அரசியல் முடிவுகள் தவறாக இருக்கலாம். ஆனால், தங்களது நிலைப்பாட்டைச் செயல்படுத்தும் வகையில், சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்புதலைமைதவறு இழைத்துவிட்டது என்றே எண்ண தோன்றுகிறது. இதில், குறிப்பாக சுமந்திரன், ஏதோ ஒரு தனிப்பட்ட அஜெண்டாவுடன் (நிகழ்ச்சி நிரலுடன்) செயல்பட்டு, அதனுள் கூட்டமைப்பை அனாவசியமாக இழுத்துவிட்டுவிட்டாரோ என்று கூடக் கருதத் தோன்றுகிறது.

அந்த வகையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தேர்தல் புறக்கணிப்பு முடிவு, அதனை செயல்படுத்திய விதம் அனைத்துமே சிறிதேனும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. விக்னேஸ்வரன் கூட, ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்கிறார் எனக் கடைசி நிமிடத்தில் கூறியதோடு, தனது தென்னிலங்கை அரசியல் பங்களிப்பை நிறுத்திக் கொண்டார்.

அதிலும் குறிப்பாக வாக்களிப்பு முடிந்து, ரணிலுக்கு ஆதரவு என்ற முடிவு தெரிந்த பின்னர் நாடாளுமன்ற வாசலில் செய்தியாளர்களுடன் பேசிய மஹிந்த, தாங்கள் டலஸுக்குத் தான் வாக்களித்தோம், ஆனாலும் அவர் தோற்றுவிட்டார் என்று அறிவித்தமை, காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் புதிய ஜனாதிபதி ரணிலைக் குறி வைத்துப் போராட்டத்திற்கு வலு சேர்க்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் என்பது சிறு குழந்தைக்கும் கூடத் தெரியும்.

அதிலும் குறிப்பாக, மஹிந்தர் டலஸ் அழகபெருமவின் பெயரை இழுத்தமை, ரணிலுக்கு ஆதரவான ராஜபக்ஷ திட்டத்தில், அவரும், ஏன் ஜீ.எல்.பிரிஸும் கூடப் பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்று எண்ண வைக்கிறது. அதாவது, பொறி வைத்து, சஜித் பிரேமதாஸாவை முட்டாளாக்கி உள்ளனர். அதில், கூட்டமைப்பும் முட்டாளாகி உள்ளனர்.

### யாருக்கு வாக்கு?

எப்போது கோட்டபாய ராஜபக்ஷ, ஜனாதிபதிபதவியிலிருந்துவிலகினாரோ அப்போதே, அவரது சகோதரர் மஹிந்தா தலைமையிலான மொட்டுக் கட்சி ஆதரிக்கும் வேட்பாளருக்கே வெற்றிவாய்ப்பு அதிகம்என்பதுருசுவாகிவிட்டது. காரணம், முதலில் இழந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அப்பால், கட்சியின் 115 எம்.பிக்கள் தலைமையுடனே கடைசி வரை இருப்பார்கள் என்று முடிவு செய்ய முடிந்தது.

ராஜபக்ஷ சகோதரர்கள் ரணிலுக்கு ஆதரவளிப்பார்கள் என்பது கூட முதல் சுற்றிலேயே முடிவான விடயம். அது பழுத்த அரசியல்வாதியான சம்பந்தனுக்கும், தென்னிலங்கை அரசியலில் காலை நனைத்துவரும் சுமந்திரனுக்கும் கூடவா, தெரியவில்லை? எது அவர்களது கண்களை மூடியது?

குறிப்பாக, சுமந்திரன் வகையறாக்களுக்கு, ராஜபக்ஷக்களைத் தமிழ் மக்கள் தொடர்ந்து வெறுக்கிறார்கள், எனவே, அவர்களது ஆதரவு பெற்ற ரணிலை ஆதரிப்பது மிகப் பெரிய பாவம் என்ற ரேஞ்சுக்கு அரசியல் செய்தார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அந்த முடிவை, தென்னிலங்கை முழுமைக்கும் தண்டோரா போடும் அளவிற்கு, தலைநகர் கொழும்பில் சுமந்திரன் பத்திரிகை செய்திகள் விடுத்து வந்தார். இது தேவையில்லாத விடயம்.

இன்று இனப்பிரச்சினை குறித்து புதிய ரணில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது, இந்த நெருடல் இரு தரப்பினரையும் சங்கடத்திற்கு உள்ளாக்கும். அதை விட முக்கியமாக, ராஜபக்ஷக்களுடன் ரணிலை கோர்த்து அரசியல் செய்ததில், கூட்டமைப்பு அந்த ராஜபக்ஷ ஆதரவு அரசுடனே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதை அறவே மறந்து விட்டது. அல்லது, அவர்களது தேர்தல் கணக்கில் முதலில் இருந்தே பிழைவிட்டு, ரணில் ஜனாதிபதி ஆக மாட்டார் என்று தவறான முடிவிற்கு கூட்டமைப்பு வந்ததற்கான விலையை தமிழ் இனமே கொடுக்கப் போகிறது.

### மீண்டும் பிழை

தமிழர் தரப்பை பொறுத்த வரை, அரசுடனான உறவில் மீண்டும், மீண்டும் பிழை விடுவதை ஒரு கலையாகவே மாற்றி விட்டனர். எப்போது, தந்தை செல்வா, பிரதமர் பண்டாரநாயகாவுடன் பண்டா – செல்வா ஒப்பந்தத்தைப் போட்டு விட்ட மூன்றாம் நாள், மட்டக்களப்பு பொதுக் கூட்டத்தில், 'இது தனி நாட்டிற்கான முதல் படி' என்று கூறினாரோ, அன்று பிடித்தது இந்தச் சாபக்கேடு. தொடர்ந்து, இந்தியா – இலங்கை ஒப்பந்தம் குறித்து, சென்னையில் ஒன்று, டெல்லியில் ஒன்று, கொழும்பில் ஒன்று மற்றும் யாழ்ப்பாணத்தில் ஒன்று என்று பல்வேறு வியாக்கியானங்களை பல்வேறு தமிழர் தரப்புகள் கொடுத்து வந்தமை, அவர்கள் மீதான நம்பிக்கையின்மையை வளர்த்தது.

இதற்கு எல்லாம் மகுடம் சூட்டும் விதமாகவே, விடுதலை புலிகள் இயக்கம், ஒரு அடி முந்தினால், இரண்டு அடி பின் வாங்கும் என்ற போக்கில் அரசியல் செயல்பாட்டில் இறங்கினர். அவ்வாறாக அவர்கள், சர்வதேசத்தையும் ஏமாற்றியதாலும், அதன் ஒரு பகுதியாக, ராஜீவ் காந்தி படுகொலையை அரங்கேற்றியதாலும் மட்டுமே, அவர்களின் முள்ளிவாய்கால் நெருக்கடியில், சர்வதேசம் வெறும வாய் வார்த்தையுடன் நிறுத்திக் கொண்டது.

இவை அனைத்திலும் அதிகப்படியான கொடுமை என்னவென்றால், கடந்த மைத்திரி – ரணில் அரசில், இதே சுமந்திரன், இதே ரணிலுடன் உட்கார்ந்து, அரசியல் தீர்வுக்கான வடிவை, புதிய அரசியல் யாப்பு நகலின் ஒரு பகுதியான ஏற்றுக் கொள்ள வைத்திருந்தார். அதனை சிறிதாயினும் நினைவு கூர்ந்திருந்தால், விட்ட இடத்தில் இருந்து தொடரும் தற்போதைய வாய்ப்பை, வாய் சவாடலால் கோட்டை விட்டிருக்க மாட்டார்.

### சமகால ஆயுதம்

அதை விடக் கொடுமை, கூட்டமைப்பு, ரணில் – எதிர் நிலையை எடுக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுக்கொண்டதாக, அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், சம்பந்தனும், சுமந்திரனும் கூறியதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இதன் உண்மை தன்மை ஏற்புடையதல்ல.



கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் இதனை மறுத்துள்ளது. அது போன்றே சுமந்திரனும் தனது பங்கிற்கு மறுத்துள்ளார். ஆனால், இந்திய செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ள கற்பனை வளம் கூட்டமைப்பு தலைமையைத் தாக்குகிறதா, அல்லது செய்தியாளர்களைக் குறி வைத்ததா, என்பது புரியவில்லை. இதனை தொடர்ந்து, இது விடயம் அறிந்த பிற நாட்டு தூதரகங்கள், கூட்டமைப்புடன் கவனமாகப் பழக தொடங்கினால், அது எதிர்பார்க்கப்பட வேண்டிய விடயமே.

இதற்கு அப்பால் சென்று, இத்தகைய செய்தி கசிந்ததால், இலங்கையில் உள்ள இந்தியா எதிர்த் தரப்புகளுக்குத் தான் அரசியல் பயன். அதிலும் குறிப்பாக, கூட்டமைப்பை, விடுதலை புலிகள் இயக்கத்தின் பிரதிபலிப்பு என்று இன்னமும் கூறி வரும் தென்னிலங்கை அரசியல் தரப்புகளுக்கு சமகால ஆயுதம். கூட்டமைப்புத்தன்கையால்தனது கண்ணை குத்திக் கொண்டது போதாது என்று, நட்பு நாடான இந்தியாவின் கண்களையும் குத்தி விட்டுள்ளது.

இதனை ரணில் – மஹிந்த தரப்பு எவ்வாறு காணப்போகிறது என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம்.

பொருளாதார நெருக்கடி காலத்தில், இந்தியா மட்டுமே இலங்கைக்கு உதவியது என்பதை ரணில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். ராஜபக்ஷக்கள் அவ்வாறு கூறவில்லை என்றாலும், வீரவன்ஸ. கம்மன்பில்ல வகையாற தொடங்கிய கூட்டணி கட்சிகளைப் பகைத்து கொண்டு, இந்தியாவுடன் பல்வேறு முதலீட்டு திட்டங்களை அவர்களே முன்னெடுத்தனர்.

நாடாளுமன்ற வாக்களிப்பிற்கு முந்தைய நாள் வரை, இந்தியா கூறுவதை இலங்கை அரசு கேட்கும் என்றும், அதன் மூலம், அரசியல் தீர்வு கிடைக்கும் என்றும் தமிழ் மக்கள் கனவு கண்டு கொண்டிருந்தனர். ஆனால், கூட்டமைப்பு தொடர்ந்து விட்ட பிழைகளால், இந்த கனவும் கானல் நீராக போய் விடுமோ என்ற கவலை எழுகிறது.

### கேள்விக்குரிய, கேலிக்குரிய விடயம்

கூட்டமைப்பை பொறுத்தவரையில், ஜனாதிபதி தேர்தலில் இந்தியா மற்றும் அமெரிக்கா அழுத்தம் கொடுத்தது என்று கூறப்படுவதற்கும் அப்பால், பிறிதொரு விடயமும் இருக்கிறது. அதாவது, டலஸ் அழகபெருமவிற்கு ஆதரவாக வாக்களிக்கும் முகமாக, சஜித் மற்றும் மொட்டுக் கட்சியின் தவிசாளர் என்ற முறையில் பிரீஸ் ஆகிய மூவரும் கைச்சாத்திட்ட பிரமாணம். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

இதில் கேள்விக்குரிய விடயம் இரண்டு. அவையே கேலிக்குரிய விடயங்களும் கூட. ஒன்று, விடுதலைப் புலிகள் காலத்திற்கு பின்னர் இது போன்று எத்தனை ஒப்பந்தங்கள் குறித்து, கூட்டமைப்பு பேசி வந்துள்ளது? இனப்போர் முடிந்த காலகட்டத்தில் நடந்தேறிய 2010 ஜனாதிபதி தேர்தலில், சரத் பொன்சேகாவிற்கு கூட்டமைப்பு ஆதரவு அளித்த போதும், இது போன்ற ஒரு ஒப்பந்தம் கை சாத்திப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், அது எழுதப்பட்ட காகிதத்தின் நிறம் கூட கட்சியிலோ, தமிழ் சமூகத்திலோ யாருமே பார்த்திருக்கவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கட்சித் தீர்மானத்துக்கு மாறாக சிலர் வாக்களிப்பு!

## நடவடிக்கை என்கிறார் தயாசிறி

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானித்தபோதும் சில உறுப்பினர்கள் அதற்கு மாறாக செயற்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாகக் கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்திருந்தது. நாங்கள் எமது கடமையை செய்தோம். என்றாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்க ளித்தார்கள்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 14பேரும் ஒரு நிலைப்பாட்டில் இருக்கவில்லை. ஒருசிலர் மறுபக்கத்துக்கு சென்று வாக்களித்துள்ளனர் என்பது வாக்களிப்பின் மூலம் தெளிவாகின்றது. அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு எதிராக மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்படும்.

சர்வகட்சி அமைப்பதே எமது நோக்கமாக இருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாங்கள் இந்த விடயத்தைத் தெரிவித்திருக்கின்றோம். நாட்டின் தற்போதைய பிரச்சினையில் இதனை செய்யமுடியுமாக இருந்தால் மிகவும் நல்லது. அத்துடன் நாட்டின் தற்போதைய நிலையில் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக்கொள்வதை விட அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எனது கோரிக்கை.

எமது தேவைகளையும் விட மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே முக்கியமாகும். அத்துடன் புதிய அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைச்சு பதவி எதனையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

எமது கட்சியின் 4 பேர் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுகின்றனர். அவர்கள் அமைச்சு பதவிகளை ஏற்றுக்கொள்வார்களாக இருக்கும். என்றாலும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கட்சியின் மத்திய குழு தீர்மானிக்கும். – என்றார்.

# கட்சிகள் எடுத்த தீர்மானத்துக்கு அமைய உறுப்பினர்கள் செயற்படவே இல்லையாம்!

## மைத்திரியார் வேதனை



புதிய ஜனாதிபதி தெரிவு விடயத்தில் கட்சிகள் எடுத்த தீர்மானங்களுக்கமைய உறுப்பினர்கள் தீர்மானங்களை எடுக்கவில்லை என்பது தேர்தல் பெறுபேறுகளின் மூலம் உணர்ந்து கொள்ளலாம் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற ஜனநாயக ரீதியிலேயே ஜனாதிபதி தெரிவு இடம் பெற்றது. அதன்படி தேர்தல் முடிவுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து எமது கட்சியை பலப்படுத்தி பயணிக்க வேண்டும். இப்போது நாடாளுமன்றம் ஒருபக்கமும் மக்கள் வேறு பக்கமுமாகவும் உள்ளனர். இதுவே உண்மை. ஏனெனில் இது மக்கள் எதிர்பார்த்த பெறுபேறு அல்ல.

அத்துடன் புதிய ஜனாதிபதி தெரிவு விடயத்தில் எங்களின் கட்சி மாத்திரமன்றி அனைத்து கட்சிகளும் கட்சி எடுத்த தீர்மானங்களுக்கமைய உறுப்பினர்கள் தீர்மானங்களை எடுக்கவில்லை என்றே தெரிகின்றது. தேர்தல் பெறுபேற்றின் மூலம் அதனை எமக்கு உணர்ந்து கொள்ளலாம்.

இதேவேளை நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில் நாங்கள் நாட்டுக்காக எந்தவொரு நபருக்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம். – என்றார்.

# கூட்டமைப்பின் ..............................

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது போன்றே, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் ரணில் ஆதரவு நிலை எடுத்த போது, கூட்டமைப்பு தங்களது கோரிக்கைகளை அவர் ஏற்றுக் கொண்டார் என்று பொத்தம் பொதுவாக கூறியது. இன்று போல், குறிப்பிட்ட எந்தவொரு உடன்படிக்கைரத்துகளும் தமிழ் மக்கள் முன்னிலையில் வைக்கப்படவும் இல்லை. அவை குறித்து தெளிவாக பேசப்படவும் இல்லை.

இவர்கள் விரும்பியது போல், டலஸ் ஜனாதிபதியாகவும், சஜித் பிரதமராகவும் ஆகி இருந்தாலும், இது தானே, தற்போதைய ஒப்பந்தத்தின் முடிவாக இருந்திருக்க முடியும்? காரணம், தென்னிலங்கையில் இனப் பிரச்சினை ஓர் அரசியல் விளையாட்டு, அரசியல்வாதிகளின் பொழுதுபோக்கு. இதில் இரண்டாவதை, தமிழ் அரசியல் தலைமைகள் தங்களுடையதாக மாற்றிக் கொண்டு கன காலம் ஆகி விட்டது.

### காதுல பூ

இந்த ஐந்து அம்ச உடன்படிக்கையில், அரசியல் தீர்வு, ஐந்தாவது பத்தியிலேயே இடம் பெற்றுள்ளது. அதிலும் வேடிக்கை என்னவென்றால், அத்தகைய தீர்வில் தமிழர்கள் எதிர்பார்ப்புகள் குறித்து விவரமாக எதுவும் கூறப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. அவ்வாறு இல்லை என்றால், மீண்டும் ஒரு முறை அரசுடனான பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும், மீண்டும் ஒரு முறை, தேர்தல் வரும், புதிய அரசு வரும், மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும். அதாவது, பழைய குருடி, கதவை திறடி கதைதான்.

இது இவ்வாறிருக்க, அந்த ஒப்பந்தத்தின் பிறிதொரு ரத்து, ஐ.நா. மனித உரிமை அமைப்பில், போர் குற்றங்கள் தரப்பில், புதிய அரசு தமிழர் ஆதரவு நிலையை எடுக்கும் என்பது. இதனை, கூட்டமைப்பு, தமிழ் மக்களின் காதில் பூ சுற்றிய வேலையாகவே பார்க்க வேண்டும். காரணம், இலங்கையில் ஆளும் எந்தவொரு அரசும் தங்களது நாட்டின் இராணுவத்தைப் பலி கடாவாக்கும் எந்தவொரு திட்டத்திற்கும் துணை போகாது. இதுவும் கூட பிறந்த குழந்தைக்கும் கூட தெரியும்.

தமிழர் வாக்குகளுடன் பதவிக்கு வந்த மைத்திரி – ரணில் அரசு கூட, சாதுரியமாக யோசித்து, தங்களது ஆட்சிக் காலத்தில், மனித உரிமை அமைப்பின் அப்போதைய தீர்மானங்கள் இலங்கையை பாதிக்காத வண்ணம் பாதுகாத்துக் கொண்டனர். அதனையே, இப்போதும், ரணில் அரசு செய்ய முயற்சிக்கும். டலஸ் – சஜித் தலைமையாக இருந்திருந்தாலும் அவ்வாறே நிகழ்ந்திருக்கும். இதற்கு ஒரு ஒப்பந்தம்...!

### அரசியல் சாணக்கியம்

சமகால அரசியல் தலைமைகள் பல வகைப்படும். ஒன்று, டக்ளஸ் தேவானந்தா போல், ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும், அரசுடன் சேர்ந்து செயலாற்றி, தங்கள் மக்களுக்கு ஏதோவொரு வகையில் பயனாற்றும் தரப்புகள். இது ஒரு விதத்தில், மலையக தமிழர் தலைவர், காலம் சென்ற செளம்யமூர்த்தி தொண்டமானின் வயையறா.

இரண்டாவது, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வகை. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று கூறி, அதில் உறுதியாக இருப்பது. அந்த வகையில், நாடாளுமன்ற வாக்களிப்பில், அவரும் அவரது கட்சியின் இரண்டாது உறுப்பினரும் பங்கு பெறாததை, யாருமே தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அதிலும் குறிப்பாக, 134 – 82 என்ற வாக்கு வித்தியாசத்தில் ரணில் வெற்றி பெற்ற பிறகு, அந்த இரண்டு வாக்குகளுக்கும் சுத்தமாக விலையில்லாமல் போய்விட்டது.

மூன்றாவது, விக்னேஸ்வரன் தரப்பும். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் வகை தான், ஆனால், அதற்காக அது ஓடாமல் இருக்காது. அந்த வகையில், ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்ததை தொடர்ந்து, டக்ளஸ் தேவானந்தாவுடன் அவருக்கும் அமைச்சு பதவி கிடைத்தால் ஆச்சரியபட கூடாது. அதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதாவது விதத்தின் அன்றாட பயன்கள் கிடைக்குமேயானால், அதுவும் வரவேற்கப்பட வேண்டியது தான்.

இதில் நான்காவது வகை, கூட்டமைப்பு. அல்லது கூட்டமைப்புத் தலைமை. கடந்த மைத்திரி – ரணில் ஆட்சி காலத்தில், தொடர்ந்து ரணிலுக்கு ஆதரவு அளித்து அவரது அரசின் உயிர் நாடியாய் இருந்து விட்டு, அதற்கு முதலெடுக்கும் விதமாக, எந்தவொரு பயனையும் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தராதது, அரசியல் சாணக்கியத்தில் எந்த வகையை சாரும்? இதுவே தற்போதும் நிகழ்ந்துள்ளது.

காரணம், டலஸ் முன் வைத்த ஐந்து கோரிக்கைகளில், அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்தின் பிடியில் உள்ள காணி பிரச்சினை ஆகியவை அப்போதே தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்து விடாமல், பின்னர் கோட்டா அரசிடமும், தொடர்ந்து தற்போது டலஸ் தரப்பிடமும் அதே கோரிக்கைகளை முன் வைத்து அரசியல் செய்வது யாரை ஏமாற்ற?

இதில் பிரச்சினையே, கஜன் பொன்னம்பலம், டக்ளஸ், விக்னேஸ்வரன் போன்றோர், தங்களது நீள – அகலங்களை அறிந்து, உணர்ந்து, அதன் படியே, அரசியல் செய்கிறார்கள். கூட்டமைப்பு தலைமை மட்டும் தனக்கு இல்லாத தேசிய அரசியல் கடமைகள் மற்றும் சர்வதேச அரசியல் பொறுப்புகள் என்பவற்றை குறித்து அதீதமாக கவலைப்பட்டு, வெண்ணை பெருகும் போது, தங்கள் கையில் உள்ள தாழியையும் உடைத்து விட்டு, கையை பிசைந்து கொண்டு நிற்பதை வாடிக்கையாக்கி கொண்டிருக்கிறார்கள்.

என்றாலும், தங்களது தவறான போக்கை அவர்கள் மாற்றிக் கொண்டதாக தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த விடயத்தில் சம்பந்தன் விட்ட பிழைகளையே, சுமந்திரன் போன்றோரும் தொடருகிறார்கள். ஆனால், சம்பந்தனை போல் இல்லாமல், சம்மன் இல்லாமல் ஆஜராகி, தங்களது பெயர் என்றல்ல, கூட்டமைப்பின் பெயரையும் கேள்வி குறியாக்கி உள்ளனர்.

### திருகு வலி

இதன் காரணமாகவும், எதிர்வரும் நாள்களில், கூட்டமைப்பு நாடாளுமன்ற அணி உடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பத்திரிகை செய்திகள் முன்னறிவிப்பு கொடுத்தது போல், 7 – 3 என்ற கணக்கில், ரணிலுக்கு ஆதரவாக கூட்டமைப்பு எம்.பிக்கள் வாக்களித்திருந்தால், அல்லது அவ்வாறன சந்தேகம் தலைமைக்கு தோன்றியிருந்தால், அங்கு துவங்கும், திருகு வலி.

என்ன, அடுத்த ஓராண்டு சுமாருக்கு குறிப்பாக நாடாளுமன்றத் தேர்தல் எதிர்பார்க்கப்படும் வேளையில், அவ்வப்போது தனி ஏர் ஓட்டும் செல்வம் அடைக்கலநாதன் கூட, அடக்கியே வாசிக்க வாய்ப்பு உள்ளது. ஆனால், தற்போதைய பிரச்சினைகளை முன்னிறுத்தி. தேர்தல் காலம் வரை உள்வீட்டு அரசியல் செய்து, தங்களக்கு ஆதாயமான இடங்களை பெற்றுக் கொள்ளவே, கூட்டமைப்பின் தலைமை பொறுப்பில் இருக்கும் தமிழரசு கட்சி தவிர்த்த இரண்டு பங்காளிகளும் முயல்வார்கள்.

அதை போலவே, கூட்டமைப்பின் அடுத்த தலைமை பொறுப்பை ஏற்க ஆத்திரப்பட்டு முடிவுகளை முன்னெடுக்கும் செல்வம் அடைக்கலநாதன். இப்பொழுது மீண்டும் தனது, தனியாவர்த்தனத்தை தொடங்க சாத்தியம் உள்ளது. இடைப்பட்ட காலத்தில், சம்பந்தன் – சுமந்திரன் பங்கு பெறாமல், ஜனாதிபதி தேர்தல் குறித்து, சஜித் பிரேமதாசாவை அவர் சந்தித்து உரையாடியமையும் நினைவில் கொள்ளப்பட வேண்டிய நிகழ்வு.

இது போன்றே. இந்த முறை, தமிழரசு கட்சிக்குள்ளேயும், தலைமை பொறுப்புகள் குறித்த சச்சரவுகள் மீண்டும் துவங்க வாய்ப்புள்ளது. அவை அனைத்துமே, சுமந்திரன் மற்றும் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய அரசியல் சார்ந்தும் கூடப் பயணிக்கலாம். அவ்வாறு நிகழுமேயானால், அதனால் ஏற்படும் அனைத்து நஷ்டங்களும் கூட்டமைப்பையும் தமிழ் மக்களையும் ஒட்டுமொத்தமாக பாதிக்க கூடியது. ஆனால் அதற்கான பொறுப்பையும், எப்போதும் போல், தன்னிச்சையாக செயல்படும் சம்பந்தன் – சுமந்திரன் தலைமையையே சாரும்!

முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# ஆடிமாதத்தின் தனிச் சிறப்பு

இது ஆடிமாதம். ஆடி மாத சிறப்புகள் தொடர்பான 40 குறிப்புகள் வருமாறு:-

1. ஆடி மாதம் பிறந்ததும் தட்சணாயனம் ஆரம்பமாகிறது. ஆடி முதல் மார்கழி வரை தட்சணாயன காலமாகும்.

2. இந்த புண்ணிய கால கட்டங்களில் புனிதநதிகளில் நீராடுவது மிகவும் விசேடம்.

3. ஆடி மாதத்தைக் கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின் தொடக்கம் ஏற்படுகிறது.

4. ஆடி மாதம் முழுவதும் கிராமப்புறத்தில் காவல் தெய்வமாக விளங்கும் மாரியம்மன், அய்யனாரப்பன், மதுரை வீரன், மாடசாமி, கருப்பண்ணசாமி போன்ற கிராம தேவதைகளுக்கு பூஜைகளும், விழாக்களும் நடைபெறும்.



5. ஆடிமாதத்தில் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவிலில் பன்னிரண்டு நாள்கள் அம்மனின் ஆடிதபசு திருநாள் மிகக் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. ஹரியும் சிவனும் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்த இந்த விழா நடத்தப்படுகிறது.

6. ஆறு, மக்களின் ஜீவநாடியாதலால், அதில் ஆடி மாதம் புதுநீர் வருவதைக் கொண்டாடுவது பல நூற்றாண்டுகளாக தமிழர் மரபாக உள்ளது.

7. ஆடி மாதத்தில் சிவனின் சக்தியை விட பார்வதியின் சக்தி அதிகமாக இருக்கும் என்பது ஐதீகம்.

8. தமிழ் மாதங்களில் ஆடி மாதத்தில் தான் அதிகபட்ச அளவுக்கு அம்மன் கோவில்களில் திருவிழா நடக்கிறது. எனவே ஆடி மாதத்துக்கு அம்மன் பக்தர்களிடம் தனி மரியாதை உண்டு.

9. கேரளாவில் ஆடி மாதத்தை இராமாயண மாதமாக அம்மாநில மக்கள் கருதுகிறார்கள்.

10. ஆடிஅமாவாசை அன்று மறைந்த முன்னோர்களுக்கு பிதிர் கடமைகளை செய்தால், ஆண்டு முழுவதும் பித்ருக்களுக்கு கடன் கொடுத்த பலன் கிடைக்கும்.

11. ஆடிபௌர்ணமி தினத்தன்று தான் ஹயக்ரீவர் அவதாரம் நிகழ்ந்தது. எனவே ஆடி பௌர்ணமி தினத்தன்று வைணவ தலங்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

12. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அம்மனுக்கு பலவித காய்கறிகளால் ஆன கதம்ப சாதத்தை படைப்பது ஐதீகமாக உள்ளது.

13. ஆடி மாதம் சுக்ல தசமியில் திக் தேவதா விரதம் இருக்க வேண்டும். அன்று திக் தேவதைகளை அந்தந்த திக்குகளில் வணங்கி பூஜித்தால் நினைத்தது நடக்கும்.

14. ஆடி மாதம் சுக்லபட்ச ஏகாதசி முதல் கார்த்திகை மாத சுக்லபட்ச ஏகாதசி வரை மாச உப வாசம் இருப்பது குடும்பத்தில் அமைதி ஏற்படுத்தும்.

15. ஆடி மாதம் கிராம தேவதை கோவில்கள் உள்பட திறக்காத எல்லா கோவில்களும் திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

16. ஆடி செவ்வாய்க்கிழமைகளில் கோவிலில் எலுமிச்சம் பழ விளக்கு ஏற்றினால் கூடுதல் பலன்கள் கிடைக்கும். ஆனால் எலுமிச்சம் பழ விளக்குகளை ஒரு போதும் வீட்டில் ஏற்றக் கூடாது.

17. ஆடி மாதம் வளர்பிறை துவாதசி நாளில் தொடங்கி கார்த்திகை மாதம் வளர்பிறை துவாதசி நாள் வரை பெண்கள் துளசிபூஜைசெய்து வந்தால், நினைத்தது நடைபெறும். வீட்டில் சகல செல்வங்களும் குவியும்.

18. கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை என்ற ஊரில் முருகன் கோவில் உள்ளது. ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை அங்குள்ள முருகனுக்கு கூடை, கூடையாக மலர்களை கொட்டி மலர் அபிஷேகம் செய்வார்கள். இதை அந்த பகுதி மக்கள் ஆடியில் மலர் முழுக்கு, அழகு வேல்முருகனுக்கு என்று சொல்வார்கள்.

19. ஆடிப்பெருக்கு திருவிழா ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்தில் விமரிசையாக நடைபெறும். அப்போது பெருமாள் மண்டபத்துக்கு எழுந்தருள்வார்.

20. ஆடி மாதம் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் காமாட்சியை வணங்கினால் திருமண தடைகள் விலகி சுபம் உண்டாகும்.

21. ஆடி மாதம் முழுவதும் மீனாட்சியை வழிபட்டால் குடும்பத்தில் அமைதி ஏற்படும்.

22. ஆடி மாதம் முத்து மாரியம்மனை மனம் உருகி வழிபட்டால் திருஷ்டிகள் விலகி விடும்.

23. ஆடி மாதம் சுக்ல துவாதசியில் மகா விஷ்ணுவை நினைத்து விரதம் இருந்தால் செல்வம் பெருகும்.

24. ஆடி மாதம் சுக்ல பட்ச ஏகாதசி தினத்தன்று அன்னதானம் செய்தால் சகல பாக்கியங்களும் கிடைக்கும்.



25. ஆடி மாதம் சுக்லபட்ச திரயோதசியில் பார்வதி தேவியை நினைத்து விரதம் இருந்தால் நினைத்தது நடக்கும்.

26. கஜேந்திரன் என்ற யானையை முதலை கவ்வியபோது அந்த யானை ஆதிமூலமே என்ற கதற உடனே திருமால் சக்ராயுதத்தை ஏவி யானையை காப்பாற்றினார். இதனை நினைவுப்படுத்தும் வகையில் ஆடி மாதம் எல்லா திருமால் தலங்களிலும் கஜேந்திர மோட்ச வைபவம் நடத்தப்படுகிறது.

27. ஆடி மாதம் ஏகாதசி, துவாதசி நாள்களில் அரச மரத்தை சுற்றி வந்து வழிபட்டால் வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும்.

28. தஞ்சாவூரில் நிசும் சூதனி உக்கிர காளியம்மன் கோவில் உள்ளது. ஆடி பதினெட்டாம் பெருக்கு தினத்தன்று தஞ்சை மாவட்ட கிறிஸ்தவர்கள் அங்கு ரொட்டி, ஆட்டுக்கறி படையலிட்டு வழிபடுவதை வழக்கத்தில் வைத்துள்ளனர்.

29. ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில் மகாலட்சுமியை வழிபட்டால் வீட்டில் செல்வம் சேரும்.

30. ஆடி மாதம் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமை அம்மனை ஆவாகனம் செய்து வீட்டுக்கு வரவழைத்து வழிபடுவது சிறப்பை தரும்.

31. ஆடி மாதம் குத்துவிளக்கை லட்சுமியாக பாவித்து அலங்கரித்து வழிபடுதல் வேண்டும்.

32. ஆடி மாதம் அம்மனுக்கு பால் பாயாசம், சர்க்கரைப் பொங்கல் வைத்து வணங்குதல் வேண்டும்.

33. அம்மனை வழிபடும் போது மறக்காமல் லலிதாசகஸ்ர நாமம் சொல்ல வேண்டும்.

34. ஆடி மாதம் வீட்டில் சிறப்பு பூஜைகள் செய்யும் போது சிறு பெண் குழந்தைகளை அம்மனாக பாவித்து, உணவு கொடுத்து, ரவிக்கை, சீப்பு, குங்குமச்சிமிழ், கண்ணாடி, வளையல், தாம்பூலம் கொடுக்க வேண்டும்.

35. ஆடிப்பூரத்தன்று ஆண்டாள் பிறந்தாள் என்பது உங்களுக்குத் தெரிந்து இருக்கும். ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவிலில் ஆடிப்பூரத்தன்று ஆண்டாளை நந்தவனத்துக்கு எழுந்தருள செய்வார்கள். அப்போது திருப்பாவை, நாச்சியார் திருமொழி, திருப்பல்லாண்டு பாசுரங்கள் பாடப்படும். இதனால் ஆண்டாள் மனம் குளிர்ந்து இருப்பாள். அந்த சமயத்தில் ஆண்டாளை வழிபட்டால், உங்களது எல்லா பிரார்த்தனைகளும் நிறைவேறும்.

36. ஆடி மாதம் அம்மனுக்கு சாற்றப்படும் வளையல்களைப் பெண்கள் அணிந்து கொண்டால் திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம், சகல நலன்களையும், நீங்காத செல்வத்தை பெறலாம் என்பது ஐதீகம்.

37. ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில் அதிகாலையில் எழுந்து குளித்து, தூய ஆடை அணிந்து, சாணத்தைப் பிள்ளையாராகப் பிடித்து, செவ்வரளி, செம்பருத்தி, அறுகு கொண்டு சூர்யோதயத்திற்கு முன்னர் விநாயகரை பூஜிக்க வேண்டும். வாழையிலை மீது நெல்லைப் பரப்பி அதன் மீது கொழுக்கட்டை வைத்து விநாயகரை வழிபட செல்வம் கொழிக்கும்.

38. ஆடி மாதத்தை பீடை மாதம் என்று ஒதுக்குவது, அறியாமையால் வந்த பழக்கம். உண்மையில், பீட மாதம் என்றுதான் பெயர். அதாவது மனமாகிய பீடத்தில் இறைவனை வைத்து வழிபட வேண்டிய மாதம் என்பதே சரியானது.

39. ஆடி பௌர்ணமியன்று சிவபெருமானுக்கு திரட்டுப்பால் அபிஷேகம் செய்து, கறுப்புப் பட்டாடை, நூறு முத்துக்கள் கோர்த்த மணிமாலை, கருஊமத்தம் பூமாலை அணிவித்து, மூங்கில் அரிசிப் பாயாசம் படைத்து வழிபட்டால் எப்பேர்ப்பட்ட பகையும் விலகும்.

40. பொதுவாகவே வெள்ளிக் கிழமைகள் அம்பாளுக்குரிய சிறந்த நாள்களாகும். இதனோடு அயனத்துக்குரிய சிறப்பும் சேருவதால் ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகள் அம்பாளுக்குத் தனிச்சிறப்பு கொண்டவையாகக் கருதப் படுகின்றன.



# பதிகமும் பொழிப்பும்

பாடல் – 06

**விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து**
**கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்**
**அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்**
**நிருத்தகீதர் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.**

பொருள்:

மதுரை மாநகரத்தின் தவப்புதல்வியான கௌரி என்கிற பெண்ணுக்காக வயோதிபத் தோற்றம் எடுத்து வந்து, உணவுண்டு களித்து பின் பாலனாகி மடியில் தவழ்ந்து அதே வேகத்தில் முத்தியும் கொடுத்து, சேர்த்துக்கொண்ட ஞான முதல்வனே! நால் வேதமும் நீயே, அதன் சாரமும் நீயே, அதை உணர்ந்தவனும் நீயே, உணர்த்துபவனும் நீயே, கருத்தாகி, பொருளாகி நின்றவனும் நீயே, நறுமணம் கமழும் சடைக்குள் கங்கையெனும் மங்கையைத் தாங்கி மறைத்துக்கொண்டவனே! (கங்காதரர் கோலத்தில் பஞ்சவடியெனும் தலைமுடியினால் ஆன பின்னப்பட்ட பூணூலை அணிபவனும், மானக் கஞ்சாற நாயனார் எனும் நமது தமிழ் நாட்டின் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரின் பக்தி மேலீட்டில், அவரது திருக்குமாரத்தியின் நீண்ட கருங்கூந்தலைப்பெற்று, அதனால் ஆன பஞ்சவடியை, நிரந்தரமாக அணிந்து கொண்டவனே) ஆதி தேவனே, அனைத்திற்கும் மூலமானவனே, ஈடு இணையே இல்லாத உன் இணையான பாதங்களைப் பாடிப்பரவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கும் உத்தமமான அடியார்களை, இசைபாடும் சங்கீதக் கலைஞர்களை, பரதநாட்டியம் ஆடும் நடனக் கலைஞர்களை, மொத்தத்தில் கலைஞர் பெருமக்களைக் கட்டிக்காத்து, இடர்கள் அனைத்தும் களைந்து பெருவாழ்வு அருள்வாயப்பா! திருநெடுங்களம் வாழும் பெம்மானே! ஆண்டவனே, இறைவனே! அன்பே! அருளே! ஆரமுதே!

திருச்சிற்றம்பலம்

**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து.)**

# ஜனாதிபதி தெரிவு விவகாரத்தில் உறுப்பினர்கள் விலைபோயுள்ளனர்

## அநுரகுமார காட்டம்



நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதி தெரிவு விவகாரத்தில்பெரும்பாலானஉறுப்பினர்கள்விலைபோயுள்ளார்கள். நாடாளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்குமிடையில் நீண்டதொரு இடைவெளி தோற்றம் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை முழுமையாக இல்லாதொழிந்துள்ளது. நாடாளுமன்றத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்படும் எந்த அரசாங்கத்துக்கும் நீண்ட ஆயுள் கிடையாது, ஆகவே வெகுவிரைவில் மக்களாணைக்கு செல்வது அவசியமாகும் என அநுர குமார திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் விசேட உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடாளுமன்றத்தின்ஊடாகதெரிவுசெய்யப்பட்டுள்ள புதிய ஜனாதிபதி நாட்டுக்காக சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நாடாளுமன்றில் எதிர்த் தரப்பு ஒன்று தோற்றம் பெற்றுள்ளதை விளங்கிக்கொள்ள முடிகிறது.இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும் என்பதும் தேர்தல் பெறுபேறுகள் ஊடாக உணர்த்தப்பட்டுள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட போது மாறுபட்ட தன்மையை அவதானிக்க முடிந்தது. டலஸ் அழகபெருமவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்து அதனை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உறுதிப்படுத்தினார்.

சபை முதல்வர் தினேஷ் குணவர்தன ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பரிந்துரைத்தார், அதனை பொதுஜன பெரமுன அல்லாதவர் உறுதிப்படுத்தினார்.

தற்போதைய பெறுபேற்றை கண்டு வியப்படையவுமில்லை,துவண்டு போகவுமில்லை.இதுதான் நாட்டின் நாடாளுமன்றத்தின் உண்மையான நிலை. நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட நிலை உண்மையில் சமூகத்தில் கிடையாது.

மக்களின் எதிர்பார்ப்பை நாடாளுமன்றத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்டுள்ளோம் என எவராவது கருது-வார்களாயின் அது முற்றிலும் மாயையானது எனக் கருத வேண்டும்.

நாட்டு மக்களின் விருப்பத்துக்கு முரணான விம்பம் நாடாளுமன்றத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் இடையில் வேறுபாடும்,பெரும் எதிர்ப்பும் தோற்றம் பெற்றுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியவற்றை எதிர்காலத்தை கருத்திற்கொள்ளாமல் தெரிவு செய்ய வேண்டும் என சகல தரப்பினரிடமும் குறிப்பிட்டோம்.

பிரதமர் பதவிக்கு சபாநாயகர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரது பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இதனைஒருசிறந்தமுன்னுதாரணமாகஎடுத்துக்கொண்டிருக்க வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய பதவிகளை நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் பெண் பிரதிநிதிகளுக்கு வழங்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் எம்முடனான சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளில் ஒரு பதவியை வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கினால் நாட்டில் நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கை மற்றும் கௌரவம் ஏற்படும்.

அதேபோல் ரவூப் ஹக்கீமின் யோசனைக்கமைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி பெண் பிரதிநிதிகளுக்கு வழங்கினால் அது முழு நாட்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும். இவ்வாறான அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை ஏற்கத் தயார் எனக் குறிப்பிட்டோம்.

ஸ்தாபிக்கப்படும் அரசாங்கத்தின் பதவி காலம் 6 மாத காலத்தை வரையறுத்ததாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தினோம், முழு நாட்டு மக்களினதும் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

எதிர்கால அரசியல் நோக்கமில்லாத வகையில் 6 மாத காலத்துக்கு வரையறுக்கப்பட்ட அரசாங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும்என்றகோரிக்கையைமுன்வைத்தோம்.

அமைச்சரவையின் எண்ணிக்கை 10 ஆக வரையறுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டோம். இருப்பினும் எமது யோசனை தோற்கடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே வேட்பாளராக போட்டியிட்டேன், பெறுபேறு இவ்வளவு தான் கிடைக்கும் என்பதை முன்கூட்டியே அறிவேன். டலஸ் அழகபெருமவிற்கு ஆதரவு என ஆளும் தரப்பினர்கள் உட்பட அரசியல் கட்சிகள் குறிப்பிட்டன. இருப்பினும் பெறுபேறு மாற்றமடைந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்திலும் விலைபோயுள்ளார்கள். இதனை எவரும் மறுக்க முடியாது. வரலாற்றிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மக்களின் விருப்பம் நாடாளுமன்றுக்குக் கிடையாது. மக்களாணை நாடாளுமன்றுக்குக் கிடையாது. நாடாளுமன்றின் ஊடாக ஸ்தாபிக்கப்படும் எந்த அரசாங்கத்திற்கும் நீண்ட ஆயுள் கிடையாது,ஆகவே வெகுவிரைவில் மக்களாணைக்கு செல்வது அத்தியாவசியமானது. – என்றார்.

# இலங்கையுடனான பேச்சுகளை விரைவில் நிறைவுசெய்வோம்!

## சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கூறுகிறார்

இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான பேச்சை விரைவில் நிறைவிற்கு கொண்டுவரவிரும்புவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜியாவா இதனைத் தெரிவித்துள்ளார்.

டோக்கியோவின் நிக்கேய் ஏசியாவிற்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்நிய செலாவணி முற்றாக தீர்ந்துபோயுள்ள நிலையில் எரிபொருள் உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கான கடும் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ள இலங்கை மக்கள் நலன்கள் தொடர்பாகவும் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரக்தியடைந்துள்ள மக்கள் தங்கள் சீற்றத்தை அரசாங்கத்தை நோக்கி திருப்பியுள்ளனர். கடன் மறு சீரமைப்பிற்கான எதிர்பார்ப்புகளை மழுங்கடித்துள்ளது, முன்னர் வலுவானவராக காணப்பட்ட ஜனாதிபதியை தலைமறைவாக செய்துள்ளது, புதன்கிழமை அவரின் இடத்திற்கு இலங்கை நாடாளுமன்றம் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்துள்ளது.

தற்போது அரசாங்கமொன்றுள்ளது. நாங்கள் எங்கள் பேச்சுகளை முன்னெடுக்கலாம், எங்கள் குழுவினர் அங்கு செல்வார்கள் எனத் தெரிவித்துள்ள சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜியாவா நாங்கள் முன்னரே சிறந்த தொழில்நுட்ப நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதால் இலங்கையில் தொழில்நுட்ப குழு ஏற்கனவே காணப்படுவதால் திட்டம் தொடர்பான பேச்சுகளை கூடிய விரைவில் பூர்த்தி செய்யலாம் என நம்பிக்கை கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

விக்கிரமசிங்க சர்வதேச நாணயநிதியத்துக்கு புதியவர் இல்லை. நிதியமைச்சர் மற்றும் ஆறு தடவை பிரதமர் என்ற அடிப்படையில் பேச்சுகளில் அவர் சம்பந்தப்பட்டுள்ளார், ஆனால் மக்கள் மத்தியில் அதிகளவு செல்வாக்கற்றவராக அவர் காணப்படுகின்றார்.

அடுத்த தலைவர் ஆதரவை அனுபவிக்கும் வரை இலங்கைநாட்டை வழிநடத்துவதற்கான நீண்ட ஆயுளை கொண்டிருக்கும் வரை சர்வதேச நாணய நிதியம் எந்த இலங்கை நிர்வாகத்துடனும் பேச்சுகளை மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் ஆணைக்கு மீறிச் செயற்பட்டால் நாடாளுமன்றுக்கு தீ வைக்கப்படலாம்!

## மக்கள் தன்னெழுச்சிப் போராட்டக்காரர்கள் எச்சரிக்கை

எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக நாடாளுமன்றம் தெரிவுசெய்துள்ள ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் ஜனாதிபதியாகத் தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையென மக்கள் தன்னெழுச்சிப்போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

அதன்படி ரணில் விக்கிரமசிங்கவைத் துரத்தும் வரை தொடர்ச்சியாகப் போராடப்போவதாகவும், அடக்குமுறைகளைமீறி அந்தப்போராட்டம் தொடரும் எனவும் காலிமுகத்திடல், 'கோட்டா கோ கம'வில் விசேட செய்தியாளர் சந்திப்பை நடத்தி போராட்டக்காரர்கள் அறிவித்தனர்.

புதன்கிழமை 102 ஆவது நாளாகவும் காலிமுகதிடலில் மக்களின் தன்னெழுச்சிப்போராட்டம் தொடர்ந்த நிலையில் நாடாளுமன்றம் 8 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்தமை தொடர்பில் தன்னெழுச்சிப்போராட்டத்தில் பங்கேற்றுள்ள போராட்டக்காரர்கள் இணைந்து ஊடக சந்திப்பொன்றை நடத்தினர்.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட தன்னெழுச்சிப்போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவரான வசந்த முதலிகே கூறியவை வருமாறு –

69 லட்சம் வாக்குகளுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாலை 3 மணிக்கு இரகசியமாக மாலைதீவுக்குத் தப்பியோட இந்தத் தன்னெழுச்சிப்போராட்டம் காரணமாக அமைந்தது.

இது நடக்கும்போது மக்களாணை பொதுஜன பெரமுனவிற்கே இருந்தது. கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் நிராகரித்தமையுடன் மஹிந்த ராஜபக்ஷவையும் பதவியிலிருந்து நீக்க இந்தப் போராட்டம் காரணமானது.

இந்த இரு சம்பவங்களுடனும் பொதுஜன பெரமுனவிற்கு இருந்த மக்களாணை காலாவதியாகிவிட்டது.

அவ்வாறிருக்கையில் காலாவதியான பொதுஜன பெரமுனவின் வாக்குகளைப் பயன்படுத்திப் நாடாளுமன்றத்திற்குள் நடந்த சதிகளூடாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு எந்தவொரு மக்களாணையும் இல்லை. 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவர் தோல்வியடைந்தவராவார்.

தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த அவரை கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் நலனுக்காகப் பிரதமராக்கவில்லை.

ராஜபக்ஷ குடும்பத்தின் நலனுக்காகவே அவர் பிரதமராக்கப்பட்டார். அவ்வாறிருக்கையில் மக்களாணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஜனாதிபதியாக ஏற்கமாட்டோம்.

அவரை விரட்டியடிக்கும் வரை இந்தத் தன்னெழுச்சிப் போராட்டத்தை மக்கள் நிறுத்தப்போவதில்லை. எம்மை அடித்துவிரட்டி, கைதுசெய்து, சுட்டுப்பொசுக்கி இந்தப் போராட்டத்தை முடிவிற்குக்கொண்டுவரலாமென ரணில் விக்கிரமசிங்க நினைக்கக்கூடாது.

ரணிலால் தற்போதைய பிரச்சினைக்கு எந்தத் தீர்வினையும் வழங்கமுடியாது. ஏனெனில் அவர் ஏற்கனவே 6 முறை பிரதமராக இருந்தவராவார்.

மத்திய வங்கி கொள்கை, பட்டலந்த வதை முகாம் போன்ற சம்பவங்களுடன் அவருக்கு உள்ள தொடர்பு ஒன்றும் இரகசியமல்ல.

தற்போதைய நாடாளுமன்றம் மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை. இப்படியே மக்களாணையை மீறி செயற்பட்டால் நாடாளுமன்றத்தை மக்கள் தீவைத்து எரிக்கும் நிலையேற்படும். அவ்வாறு ஒரு சம்பவம் நடந்தால் அதனை எம்மீது சுமத்தி, எங்களைத்தேடி வரவேண்டாம்.

மக்களின் விருப்பத்துக்கு மாறாக அமைக்கப்படும் அரசாங்கத்துக்கு என்ன நடக்கப்போகின்றது என்பது இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் தெளிவாகும். எமது போராட்டம் தொடரும் என அவர் தெரிவித்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அங்கம்-69

**தமிழ் தலைவர்களின் தவறுகள்**

தமிழ் தலைவர்கள் தொடர்ச்சியாக இனப் பிரச்சினையை, அதை வைத்தே தேர்தலில் வெற்றி கூடிய பேரினவாதத் தலைவர்களோடுதான் பேச்சு வார்த்தைகளில் தீர்க்க முயன்றார்கள். நாடாளுமன்ற முறைமைகளையே கையாண்டார்கள். சிங்களத் தலைவர்கள்தான் பேரினவாதத்தில் ஊறியவர்கள் என்று தெரிந்தும், நாடாளுமன்றப் பெரும்பான்மை அவர்களின் கைகளில் இருக்கும் வரை தலைவர்கள் அந்த வட்டத்தை விட்டு வெளியே வரவில்லை – சத்தியாக்கிரகம் செய்ததைத் தவிர.

சத்தியாக்கிரகம் இராணுவத்தின் மூலம் முறியடிக்கப்பட்டதும் திரும்பவும் நாடாளுமன்றம் சென்று தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறை பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றார்கள். பேரினவாதத் தலைவர்களுக்கு அப்பால் சென்று நேரடியாகவே சிங்கள மக்களுடன், அவர்களுக்கிடையே இருந்த கட்ட மைப்புகள் மூலம் பேசி, தங்களது கோரிக்கைகளை விளக்கி, அவை பிரிவினை வாதம் அல்ல என்ற புரிந்துணர்வை ஆக்கவில்லை என்ற குறையும் ஆதங்கமும் உண்டு.

1977 க்கு முன்னர் இன உறவுகள் இருந்த நிலைகளில் இவற்றுக்குச் சந்தர்ப்பங்கள் கூடிய அளவில் இருந்தன. ஆயின் அவை இரண்டு பகுதிகளின் அரசியல் தலைவர்களும் கடைப்பிடித்த தீவிரவாதத்தால், சமரச முயற்சிகள் முளை விடுவதற்கோ வளர்வதற்கோ வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரி நிலைப்பாட்டை கொண்டவர்கள் தமிழர் பிரதேசங்களில் போட்டியிட்டாலும் சமஷ்டியை நோக்கித் தமிழ் மக்கள் வீறு நடை போட்டமையால் அவர்களுக்கு ஆதரவுகள் பெருமளவில் கிடைக்கவில்லை. சில புத்திஜீவிகள் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார்கள்.

இன்றும் இனப்பிரச்சினைக்கான ஒரு நல்ல அடிப்படையாக வைத்திலிங்கம் – பீற்றர் கெனமன் (இருவரும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள்) பிரேரணை கருதப்படுகிறது.

பின்னர் இந்த இடதுசாரி கட்சிகள் கூட அதிகாரத்துக்கு வந்து கொண்டிருக்கும் பேரினவாதத்துக்கு எதிராக தேர்தல்கள் மூலம் புரட்சிகள் வராது, தமது இடதுசாரி மக்களுக்கு ஏதும் பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்துவதானால் அந்தப் பேரினவாத அரசாங்கங்களோடு சேர்ந்து ஓடுவதே சிறந்தது என்று அரசாங்கத்தில் இணைந்தார்கள். அவர்கள் கூட இனப் பிரச்சினையை இரண்டாம் பட்சமாக்க, கொள்கை ரீதியில் அவர்களோடு இருந்த பாலதம்பு, எட்மண்ட் சமரக்கொடி, வாசுதேவ நாணயக்கார வெளியேறியும் செல்வாக்குப் பெறவில்லை. வெறும் இலட்சியத்தோடு நின்றார்கள். 'புன்னகை' படத்தில் வந்த நாகேஷின் பாத்திரம் மாதிரி வாசுதேவ நாணயக்கார எங்கெங்கோ ஒட்டிக் கொண்டிருக்கிறார்.

தமிழ் மக்கள் அன்றைய நாள்களில் இடதுசாரி கட்சிகளோடு இணைந்து, தென்னிலங்கையில் அவர்கள் மூலமாக, அவர்களது குடையின் கீழ், சிங்கள மக்களுக்கு தங்களது கோரிக்கைகளை தெளிவுபடுத்தி இருக்கலாம் என்ற குறைபாடுகள் உண்டு. ஆனால் பின்னாளில் இடதுசாரிகளே உணர்ந்து கொண்ட யதார்த்தத்தில் அது எவ்வளவு தூரம் ஏதும் தாக்கத்தை தந்திருக்கும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.



**ஜே.வி.பியின் வரவு**

ஒரு வர்க்க, அரசியல், சமூகப் புரட்சியை கைவிட்டு விட்டார்கள் இந்த இடதுசாரித் தலைவர்கள், தாங்கள்தான் புரட்சியை உருவாக்கப் போகும் இளைய தலைமுறை என்ற கோத்துடன்தான் றோஹண விஜயவீரவும் அவரின் தோழர் களும் களத்தில் குதித்தார்கள்.

விஜயவீர கம்யூனிஸ்ட் அணியில் இருந்து, அது கொள்கைகளால் மாஸ்கோ அணி, சீன அணி எனப் பிளவுபட சண்முகதாசனின் சீனா அணியில் சேர்ந்து இயங்கியவர்.

சண்முகதாசன், தமிழர் – சிங்களவர்கள் ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் இடையில் பல கருத்தாக்கங்களும் இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பாதைகளும் பற்றிய நிலைப்பாடுகளை வைத்தாலும், அவருடன் வளர்ந்த ஜே.வி.பி. தலைவர் விஜயவீர தனது அங்கத்தினருக்குப் படிப்பித்த கட்டாயமான போதனைகளுள் 'இந்தியாவின் விரிவாக்கம்' என்பது ஒன்றாக இருந்தது. அரசியல் வளர்ச்சிக்கு ஏற்ப இதன் தன்மையும் தொனிகளும் மாறினாலும், இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு இந்திய படைகள் 1987 இல் வந்ததும் 'இந்திய ஏகாதிபத்தியம்' என்ற தலைப்பில் இவை தொடர்ந்தன.

இந்தியாவின் விரிவாக்கம் என்ற அத்தியாயத்தை அவர் எழுதிய போது தமிழ் மக்களின் அபிலாசைகளை சண்முகதாசன் நடத்திய சம்பாசணைகளில் இருந்தும், அவருடைய இணைக்கப் பேச்சுக்களில் இருந்தும் தாம் கணித்தார் எனவும், இந்திய – சீன எல்லைப் போரை ஒட்டித்தாம்படித்த கட்டுரைகள், ஜவஹர்லால் நேருவின் நோக்குகள், 'சிங்கள மக்களின் அறியப்படாத எதிரி' என்ற தலைப்பில் சிறில் மத்தியூ எழுதிய நூல் (Sinhala Adisi Hathra), சிங்கள ஜாதி (Sinhala Jathiya) என ஆர்.ஜி. சேனநாயக்க எழுதிய நூல் ஆகியன அடிப்படையாக இருந்தன எனவும் தான் பின்னர் வழங்கிய நேர்காணல்களில் தெரிவித்திருந்தார்.

ஆகவே தமிழ் மக்களை பாமர வர்க்க ரீதியாக, நடு, கீழ் மட்டத்திலிருந்து, சிங்கள மக்களுடன் நேரடியாகப் பேசுவது இந்த இளைஞர்களின் முனைப்பாலும், அவர்கள் வழமையான இடதுசாரிகளை ஒதுக்கியமையாலும், தமிழ் மக்களை இந்திய நாட்டின் தொப்புள் கொடி உறவுகளாகவும் கணித்தமையாலும் ஒரு பனித்திரையை ஏற்படுத்தி சாத்தியமற்ற தாக்கி விட்டது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்டின் எதிரிகளாக, பிரிவினைவாதிகளாக கணித்தார்கள். 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின் ஜே.ஆரின் கையாளான சிறில் மத்தியூ அதனை நடைமுறைப்படுத்த முன்னணியில் இருந்தார் என்பது தெரிந்த செய்தி. தமிழ் மக்களை தாக்க வந்தவர்கள் பெரும்பாலானோர் படித்த இளைஞர்கள். தமிழ் மக்களைத் தப்பி ஓடும்படி ஆங்கிலத்திலேயே சத்தம் போட்டார்கள். கொல்வது அவர்கள் நோக்கமாக இருக்கவில்லை. எரிப்பதும் அழிப்பதும்தான் என்பது அனுபவப்பட்டவர்களின் சாட்சியங்கள்.

ஜூலை 31, 1983இல் ஜனாதிபதி ஜே ஆர். கலவரத்தை அடுத்து கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ பிரிவு, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.), நவ சமசமாஜக் கட்சி, முன்னைய லங்கா சமசமாஜக் கட்சியின் பிரிந்த கிளை என்ற மூன்று கட்சிகளையும் தடை செய்தார். தமிழர், சிங்கள உறவின் சீர்கேடுகளைப் பாவித்து இந்த மூன்று கட்சிகளும் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான திட்டங்களில் வன்முறைகளைப் பிரயோகித்தன எனக் குற்றம் சாட்டப்பட்டது. அவற்றிற்கான விளக்கங்களில் பெறப்பட்ட சாட்சியங்களில் இருந்து தமிழ் மக்களின் வீடுகளை அழிப்பது, அவர்களது உடமைகளையும், வியாபார நிறுவனங்களையும் தாக்குவது (ஆனால் அவற்றைக் கொள்ளையடிக்காது விட வேண்டும் என்ற கட்டாயமான பணிப்புரை), அதைத் தொடர்ந்து சிங்கள – முஸ்லிம் கலவரத்தை உருவாக்குவது, பின் சிங்கள பௌத்தர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஒற்றுமையைக் குலைப்பது போன்றவை நடக்க, இராணுவக் கட்டமைப்புகள் தங்களுக்குள்ளே மோதி அரசாங்கத்தைக் கைப்பற்றி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட, இவை நடந்தன என நியாயப்படுத்துதல்தான் இருந்தது. இதுவே இந்தக் கட்சிகளின் ஆதரவாளர்களின் திட்டமாக இருந்தது என மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அப்படியானால் தமிழீழம் கேட்டதற்காகத்தானே தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள், பின் ஏன் பிரிவினைக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி வன்முறையை ஆதரிக்கும் நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் போதும் தடை செய்யப்படவில்லை என்ற கேள்விக்கு, அரசைக் கைப்பற்றும் திட்டங்கள் கூட்டணிக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரியும், ஆனால் அரசாங்கம் உடனடியாக அரசமைப்புச் சட்டத்தில் ஆறாம் திருத்தத்தை கொண்டு வந்து, பிரிவினையைத் தடை செய்துள்ளது, அது அவர்களைக் கவனித்துக் கொள்ளும் எனப் பதில் அளிக்கப்பட்டது.

'அறகல்ய' (Aragalya) கிளர்ச்சி என இன்று இளைஞர்கள் எடுத்து ஆதரவு பெறும் கிளர்ச்சியின் ஆரம்பமே 1971இன் காலத்தில் அந்த பெயரில் ஜே.வி.பியினால்தான் நடத்தப்பட்டது. மாத்தறை மக்கள் குழு (Matara Citizens Committee) தாம் பதிப்பித்த 'தேச பிரேம ஜனதா வியாபாரய' (Deshapremi Jonathan Viyaparaya) என்ற கருப்பு வெள்ளை நிறங்கள் முத்தாய்ப்பு வைத்து வெளியிட்ட நூலில் அதனைப் பிரபலப்படுத்தியது.

இந்தப் பின்னணிகள், பேசப்பட்ட தார்மீகங்களின் ஆதிமூலங்கள், அவற்றின் ஆழங்கள், மாற்றங்கள், அரசியலுக்கான அணுகுமுறைகள் என்பவை, அவை தமிழ் மக்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொள்ளும் என நம்பிக்கை தரக்கூடிய மனோபாவங்களை கொண்டுள்ளனவா என்ற புதுப் புரிந்துணர்வைத் தரும். அரசியலின் காயங்கள் போலவே, பொதுவாக 'அறகல்ய' பெயரின் கீழ் இயங்கும் போராளிகள் குழுக்கள் ஒன்றிலிருந்து ஒன்றில் பல கொள்கை அளவில் தனியாக இருக்கின்றன, பொதுவாக சோசலிஸ்ட் அணி போராட்டத்தை திசை திருப்ப முயலுகின்றது என்றும். ஜே.வி.பி. அவர்களுக்கான பொதுத் தலைமையை நோக்கிப் பேசுகிறது என்றும் அதன் தலைவர் அனுரா குமார அறிவிக்கிறார்.

ஆக, இந்தக் காலி முகத்திடல் தார்மீகங்கள், இந்தப் போராளிகள் எவருக்கு ஆதரவுதந்து அதிகாரத்துக்குக் கொண்டு வந்தாலும், அத்தரப்பு தமிழ் மக்களின் அபிலாஷையை உள்ளடக்காது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது.

(வளரும்)